## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 13ம் ஞாயிறு - திருப்பலி 02

03.07.2018 தூய தோமையார் திருவிழா - திருப்பலி 03

06.07.2018 தூய மரிய கொரற்றி - திருப்பலி 05

07.07.2018 அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் - திருப்பலி 06

08.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 14ம் ஞாயிறு - திருப்பலி 07

11.07.2018 தூய பெனடிக்ட் - திருப்பலி 08

13.072018 தூய ஹென்றி - திருப்பலி 09

15.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 15ம் ஞாயிறு - திருப்பலி 10

16.07.2018 தூய கார்மேல் அன்னை - திருப்பலி 11

22.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 16ம் ஞாயிறு - திருப்பலி 13

25.07.2018 திருத்தூதர் தூய யாக்கோபு திருவிழா - திருப்பலி 14

26.07.2018 தூய சுவக்கின் அன்னம்மாள் திருவிழா - திருப்பலி 15

28.07.2018 தூய அல்போன்சா திருவிழா - திருப்பலி 16

29.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 17ம் ஞாயிறு - திருப்பலி 17

31.07.2018 தூய லொயோலா இஞ்ஞாசியார் - திருப்பலி 19


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


சென்னை சலேசிய சபையும் தோமையாரும் 20

மரியாளின் வாழ்வில் தூய சுவக்கின் அன்னம்மாள் 22

தூய இஞ்ஞாசியார் - வாழ்வு தரும் பாடம் 25

திருச்சபை செய்திகள் 26

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 13ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

I. சா.ஞா.1:13-15, 2: 23-24 II. 2கொரி. 8:7,9,13-15 மாற்கு 5: 21-43

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் ஆண்டின் பொதுக்காலம் 13ம் ஞாயிறை சிறப்பிக்கின்றோம். இன்றைய நாள் நமக்கு தரும் செய்தி "அஞ்சாதீர்... நம்பிக்கையை விடாதீர்". இன்றைய நற்செய்தி வாசகம் 12ஆண்டுகளாக பெரும்பாட்டினால் துன்புற்று புலம்பிய பெண் பற்றியும், யாயீர் மகள் உயிர்பெற்றல் பற்றியும் உணர்ச்சிகளின் குவியலாக இருப்பதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது.

**1. துயரம்:** யாயீரின் மகள் சாகும் தறுவாயில் இருந்ததால், யாயீர் இயேசுவை நாடி வருகிறார். எவ்வளவு நெருக்கடியான மனநிலையில் இருந்தார் என்றால், இயேசுவின் காலிலே விழுந்துவிட்டார். "போதகரை இன்னும் ஏன் தொந்தரவு செய்கிறீர்?" என்று சொல்லி அவருடைய நம்பிக்கையையும், மனவலிமையையும் சீடர்கள் குலைக்கிறார்கள். **2.ஊக்கம்:** "அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் தளரவிடாதீர்" என்று சொல்லி அவருக்கு ஊக்கமூட்டி இயேசு உடன் செல்கிறார். **3. அழுகை, துக்கம்:** இறந்த வீட்டில் ஒப்பாரியும், ஓலமும், புலம்பலும் நிலவுகின்றன. **4. துணிவான நம்பிக்கை:** "சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்" என்னும் இயேசுவின் துணிச்சலும் நம்பிக்கையும் நிறைந்த சொற்கள். **5. நகைப்பு:** மக்களிடம் நம்பிக்கை இல்லாத நகைப்பு. **6. வியப்பும் மலைப்பும்:** இயேசு சிறுமியை உயிர்ப்பித்தபோது அங்கிருந்தோர் "மலைத்துப்போய் மெய் மறந்து நின்றார்கள்".

அன்பர்களே, இத்தனை உணர்வுகளுக்கும் நடுநாயகமாக விளங்குவது இயேசுவின் நம்பிக்கையும், இயேசுவின்மீது யாயீர் கொண்டிருந்த நம்பிக்கையும் தான். எனவேதான் இயேசு, "அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்" என நமக்கு இன்று அறிவுறுத்துகிறார். நம் வாழ்க்கையில் எவ்வளவோ கொந்தளிப்புகள் வந்தாலும் நாம் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல், நம்பிக்கையுடன் வாழ முயல வேண்டும். இயேசு நமக்கு வாழ்வளிக்க வந்தார், நமக்குப் புத்துயிர் வழங்க வந்தார். நம்மை இறைவாழ்வில் பங்குபெறச் செய்தார். எனவே கடவுளால் எல்லாம் நிறைவேற்ற முடியும் என நாம் உளமார நம்ப வேண்டும். அந்த நம்பிக்கை நம் வாழ்வில் வெளிப்பட வேண்டும். அப்போது இயேசு நமக்கு வாழ்வளிப்பார். நம்மைச் சாவிலிருந்து மீட்டு, இறைவனோடு என்றென்றும் வாழ்கின்ற பேற்றினை நமக்கு அளிப்பார். ஆகவே அத்தகைய உறுதியான நிலைப்பாட்டில் நாம் வாழ்வதற்குத் தேவையான வரத்திற்காகத் தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம் நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக மன்றாடுகிறோம். தங்களின் புனிதமான வாழ்வினால் தங்களைச் சார்ந்துள்ள மக்களுக்கு நம்பிக்கையையும், அன்பையும் கற்றுத்தர வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் ஆழத்தை காட்டிய இறைவா, எதிர்பாரா நிகழ்வுகளை தாங்கும் உறுதியான நெஞ்சம் கொண்டிருக்கவும், அத்தகைய சூழலில் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காது கடவுளின்மீது அசைக்க முடியா நம்பிக்கை கொண்ட வாழ்வை வாழ தேவையான ஆற்றலால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இறைவனை நம்பி நாம் செய்கின்ற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியையே தருகின்றது என்ற நம்பிக்கையோடு அனைத்து பணிகளையும் ஆண்டவரின் சித்தப்படியே செய்ய நம்பிக்கையை ஆழப்படுத்த வரமரள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்ற வேளைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 03.07.2018 தூய தோமையார் திருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. P. விக்டர்

அன்பு சகோதர சகோதரிகளே, இன்று நாம் திருத்தூதர் தூய தோமா அவர்களின் திருவிழாவைச் சிறப்பிக்கின்றோம். இந்தியாவிற்கு நம் ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை கொண்டு வந்த முதல் திருத் தூதர் இவரே. கலிலேயா நாட்டில் பிறந்த இவர் இயேசுவுடன் இணைந்து பயணித்ததை நாம் நன்கறிவோம். ஒருமுறை இயேசு "வாருங்கள் யூதேயாவுக்குப் போவோம்" என்று தமது சீடர்களிடம் சொன்னார். மற்ற சீடர்கள் தயங்கிய வேளையில் நம்முடைய தோமா அவர்கள், "வாருங்கள் நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" (யோவா. 11:16) என்று கூறி இயேசுவின்மீது தமக்கிருந்த பக்தியை வெளிப்படுத்தினார்.

இயேசு உயிர்த்த பிறகு தமது சீடர்களுக்குக் காட்சியளித்தார். அப்போது நமது தோமா அவர்கள் அங்கில்லை. பின்னர் வந்த அவரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தோமாவோ, "நான் இயேசுவின் விலாவில் என் கையை விட்டாலன்றி நம்பமாட்டேன்" என்றார் (யோவா.20:25). அதனால் "நம்பா தோமா" என்கிற பட்டத்தை நமது மக்கள் அவருக்கு வழங்கினார்கள். ஆனால் இயேசு அவரை வெறுக்கவில்லை. மாறாக அவரை அழைத்து தனது காயங்களைக் காட்டி "இங்கே உன் விரலை இடு,

ஐயம் தீர்த்து நம்பிக்கைக் கொள்" (யோவா. 20:27) என்று கூறி அவரது நம்பிக்கையை உறுதிப்பட வைத்தார். இயேசுவால் உறுதிப்படுத்தப்பட்ட அதே நம்பிக்கையோடுதான் தூய தோமா அவர்கள், தான் வாழ்ந்த கலிலேயாவை விட்டு நமது நாட்டுக்கு நற்செய்தி அறிவிக்க வந்தார். இயேசு விண்ணகம் சென்ற பிறகு திருத் தூதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதிக்குச் சென்றனர். தூய தோமா அவர்கள் பல்வேறு நாடுகள் கடந்து இந்தியாவில் உள்ள கேரள நாட்டின் கடற்கரைப் பகுதிகளுக்கு நற்செய்தி அறிவிக்க கி.பி. 52ல் தொடங்கி கி.பி. 72ல் தனது நற்செய்தி பணியினை நிறைவேற்றி முடித்தார். இத்திருப்பலியில் இணையும் வேளையில் புனிதரின் நம்பிக்கையும், பக்தியும், பணி வாழ்வும் நம்மை இயேசுவின் சாட்சிகளாக மாற்றட்டும். இயேசுவின் சாட்சிகளாக வாழ்ந்து, இயேசுவுக்கு சாட்சிகளை உருவாக்குவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, எம் திருஅவையை வழிநடத்தி வரும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் யாவரையும் கண்ணோக்கியருளும். நற்செய்திக்கும், சாட்சிய வாழ்வுக்கும் சவால்கள் நிறைந்த இந்நாட்களில் இவர்கள் உமது நற்செய்தியை உண்மை அன்புடன் பறைச்சாற்றும் வல்லமையை வழங்கியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, எமது இந்திய திருநாட்டை ஆளுகை செய்துவரும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், மக்களின் பிரதிநிதிகள் யாவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டப் பணியைச் சுயநலமில்லாத பொதுநல மனப்பான்மையோடு ஆற்றிடவும் நாட்டை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திடவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறுபேற்றோர் என்றவரே, துவக்கத்தில் ஏற்பட்ட சந்தேகத்தின் விளைவால் உம்மை அறிந்து பின்பு உம்மிடம் கொண்ட நம்பிக்கைக்காக இந்தியாவிற்கு வந்து நற்செய்திக்காக தமது உயிரையும் தந்து இரத்த சாட்சியாக மரித்த புனித தோமாவைப்போல நாங்களும் உம்மீது கொண்டுள்ள நம்பிக்கையில் உறுதி பெற்றவர்களாய் நற்செய்திக்கென்று சாட்சிய வாழ்வு வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் அரசரே இறைவா, திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் யாவும் எம்மை உற்சாகப்படுத்தி, மகிழ்ந்திருக்கச் செய்யும் நிகழ்வுகள். இத்தகைய நிகழ்வுகளைக் கொண்டாடி மகிழும் நாங்கள் வெறும் கொண்டாட்டங்களோடு, நின்றுவிடாமல் திருவிழாவின் முக்கிய நோக்கமாகிய அன்புறவில் மகிழ்ந்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 06.07.2018 தூய மரிய கொரற்றி திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி வில்சன்

தூய மரிய கொரற்றி வாழ்வு "20ம் நூற்றாண்டின் புனித ஆக்னசு" என அழைக்கும் அளவிற்கு உயர்ந்திருந்தது. அதற்குக் காரணம் ஏழ்மையிலும் அவரது தாய் ஊட்டி வளர்த்த ஞானஅறிவே. அவர் முதல் திருவிருந்து பெறும்போது 12வயது மிக்க எளிய சிறுமியாக இருந்தார். திருவிருந்து பெற்று இரண்டு வாரம் ஆகவில்லை. இவரது அழகு அலெக்சாண்டரோ செரனெல்லா என்கிற 18 வயது இளைஞனைப் பாவம் செய்யத் தூண்டியது, தவறான வழியில் அவரை அடைய முயன்றான். அதற்கு இணங்க மறுத்தவரைக் கத்தியால் குத்திக் கிழித்தான். "பாவம் செய்யாதே" என பலமுறை எச்சரித்தும் பயனில்லை. குற்றுயிராய் விடப்பட்ட அவரை மருத்துவமனையில் சேர்த்தனர். 24மணி நேரத்திற்குப் பிறகு உயிர்பிரியுமுன், "நான் மன்னித்து விட்டேன் அவரை" எனக்கூறி உயிர் நீத்தார். யாருக்கும் கிடைக்காத பாக்கியம் தூய மரிய கொரற்றிற்குக் கிடைத்தது. அவரது புனிதர் பட்டத்தின் போது உலகின் பல பகுதிகளிலிருந்து 2,50,000 மக்கள் உரோமையில் பங்கேற்றனர். 12ம் பத்திநாதர் மரியாவிற்கு புனிதர் பட்டம் வழங்கினார். கற்பு என்பது இருபாலருக்கும் சமம். கற்பே உன் விலை என்ன? என கேட்கும் சூழலில் நாம் உள்ளோம். எனவே, மனித மாண்பு காக்கவும், தூய ஆவியின் ஆலயமாக நாம் வாழவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, காலச்சூழலால் பாவம் புரிந்து சிறையில் அடைப்பட்டு மனம் மாறத் துடிக்கும் உள்ளங்களை திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரும் தங்களுக்கிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, சிறைக்கு சென்று நற்செய்தி பரப்பும் பணியாளர்களை உருவாக்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய ஆவியே இறைவா, திருமுழுக்கால் கழுவப்பட்ட அனைத்து மக்களும் தூய ஆவியின் ஆலயமாக வாழ வேண்டுமென்றும் "பாவம் செய்வதைவிட இறப்பதே மேல்" என இலட்சியம் கொண்டு வாழ தேவையான சக்தியையும், ஆற்றலையும் தந்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தூயவரே இறைவா, உலகில் எத்தனையோ குழந்தைகள் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகின்றனர் அவர்களை நீரே ஆசீர்வதியும். இந்த பாவத்திற்கு காரணமானவர்கள் அலெக்சாண்டரோவைப் போல் பாவத்திற்காக மன்னிப்பு கேட்டு மன்றாடி நல்வழியில் நடந்து புதுவாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.07.2018 அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் 1902ம் ஆண்டு சனவரி 13ம் நாள் மத்திய அமெரிக்காவில் நிக்கராகுவா நாட்டில் மெர்சேடஸ் நர்ட்பேசா, அன்னா மெனேஸஸ் என்னும் தம்பதியர்களுக்கு அன்புப் புதல்வியாக பிறந்தார். தமது 12ம் வயதில் சலேசிய கன்னியர்கள் நடத்திய பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். "மரியாளின் குழந்தைகள்" (Children of Mary) என்று அழைக்கப்பட்ட பக்த சபையில் உறுப்பினராகி இயேசுவை அரசராகவும், மரியன்னையை அரசியாகவும் தம் வாழ்வில் ஏற்றுக் கொண்டார். 1919ம் ஆண்டு சான்சால்வதாரில் சலேசிய கன்னியர் சபையில் சேர்ந்தார். புறநகர்ப் பகுதியில் வறுமையில் வாடிய ஏழைகளுக்கும் வீதியில் வாழ்ந்த மக்களுக்கும் ஆசிரியையாகவும், திருத்தூதுவராகவும் விளங்கினார். ஆரட்டரிகளை உருவாக்கி சிறுவர் சிறுமியர்க்கு உணவு, உடை மற்றும் கல்வி பெற வசதி செய்தார். "சகாய அன்னையின் கோட்டை" என்ற பெயரில் வீட்டுவசதித் திட்டங்களை உபகாரிகளின் தாராள உதவியுடன் ஏழைகளுக்குச் செய்து கொடுத்தார். விசுவாசத்தில் உறுதியும் பணியில் தெளிவும், வாழ்வில் ஒளிவு மறைவற்றத் தன்மையும் பெற்றிருந்தார். ஆசிரியராக, மறைக்கல்விப் பயிற்றுவிப்பவராக, கலைஞராக, மருத்துவ உதவியாளராக, குழந்தைகளுக்கு நல்லதொரு தாயாக, ஏழைகளுக்குப் புகலிடமாக, அடைக்கலமாக விளங்கிய இவர், இயேசு மரியின் பக்தியை எல்லா இடங்களிலும் பரப்பி 1977ம் ஆண்டு ஜூலை 7ம் நாள் மாரடைப்பின் காரணமாக இயற்கை எய்தினார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2002ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவர்தான் மத்திய அமெரிக்காவிலே முதல் முறையாக அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர். இவரின் வாழ்க்கை நெறியைப் பின்பற்றி வாழ இத்திருப்பலியில் தொடர்ந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. முழு முதல் தலைவனே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அனைவரும் தங்களின் வாழ்வில் இறைப்பக்தியை எல்லா இடங்களுக்கும், மக்களுக்கும் எடுத்துச் சென்று சேர்க்கவேண்டிய அருளையும், ஆசீரையும் அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. படைப்பின் தலைவனே எம் இறைவா, பகிர்ந்து வாழாத தன்மை ஒரு கொலையே என்ற அருளாளர் மெனேஸசின் வார்த்தைக்கேற்ப, நாங்கள் அனைவரும் எங்களிடம் உள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து வாழவும், எங்களின் ஆற்றல், சக்தி, திறமைகளை தேவைப்படுவோருக்கு பயன்படுத்தவும் வேண்டிய அருளாசீரை எங்களுக்கு அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, அருளாளர் ரொமேரோவைப் போல நாங்கள் ஒவ்வொருவரும் விசுவாசத்தில் உறுதியும், பணியில் தெளிவும், ஒளிவுமறைவற்ற தன்மையும் பெற்று வாழ்வில் திறம்பட உம் பணியைச் செய்திட தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நன்மைகளின் ஊற்றே இறைவா, எளிய மனத்தோராகிய ஏழை, எளிய மக்களை நாங்கள் அன்பு செய்து, அவர்களின் சிரிப்பில் உம்மைக் காணும் அருளினைத் தந்தருளவும், அவர்களின் கல்வி வளர்ச்சிக்கான முன்னேற்பாடுகளைச் செய்யக்கூடிய தாராள மனதைத்தந்து ஆசீர்வதித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 08.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 14ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. எசே. 2: 2-5 II. 2கொரி. 12:7-10 மாற்கு 6: 1-6

அன்பு இறைமக்களே, நம் தாய் திருஅவையானது இன்று பொதுக்காலம் 14ஆம் ஞாயிறை சிறப்பிக்க அழைக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைவாக்கினர் எசேக்கியேல் கடவுளின் கட்டளைகளை மீறி மனம் போன போக்கில் வாழ்ந்த இஸ்ரயேலரை நல்வழிப்படுத்த அனுப்பப்படுகிறார். இவரும் கடவுளின் ஆற்றலில் முழு நம்பிக்கைக் கொண்டு துணிவுடன் இறைவாக்குப் போதிக்கும் பணியைச் செய்கிறார். புனித பவுலடியார் கூறுகிறார், "நான் என் வலுவின்மையில்தான் மனமுவந்து பெருமைப் பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும். நான் வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமைப் பெற்றவனாக இருக்கிறேன்".இன்றைய நற்செய்தியில் இயேசு தம் சொந்த ஊருக்கு வந்தபோது மக்கள் அவரில் நம்பிக்கை கொள்ளவில்லை. எனவேதான் இயேசு அவர்களிடம் கூறினார். "சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்பு பெறுவார்". நாம் எல்லோரும் திருமுழுக்கு பெற்றவர்கள் என்பதினை மனதில் கொண்டு எசேக்கியேலைப்போல், பவுலடியாரைப்போல் இயேசுவின் உண்மையான சீடர்கள் என்பதனைச் செயல்களில் காட்ட இறைவாக்குப் பணியில் பங்கேற்க நல்ல மனஉறுதியைத் தரும்படி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, உம் பணிசெய்ய நீர் உருவாக்கிய வழிகாட்டிகளை கண்ணின் இமைப்போல நீர் பாதுகாப்பது போல் உம்மால் அருட்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் இன்னல்கள் பலவரினும் தளராது பணிசெய்ய காத்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. "என் அருள் உனக்குப்போதும், வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்றுரைத்தவரே, எம் வாலிபப் பிள்ளைகள் உமது வார்த்தைகேட்டு,நம்பிக்கைக்கொண்டு, நாட்டுக்கும், வீட்டுக்கும் பங்கிற்கும் நல்ல முன்மாதிரியாக செயல்பட அவர்களுக்குத் தேவையான ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இஸ்ரயேலருக்கு எதிராக இறைவாக்கினர் எசேக்கியேலை அனுப்பிய இறைவா, உம்மக்களுக்கு எதிராக கலகம் செய்து சாதிமத பேதத்தையும் சண்டை சச்சரவுகளையும் கிளர்ந்தெழச் செய்யும் சமூக விரோதிகளை அடக்கவும், மனமாற்றம் அடையவும் உமது தூய ஆவியின் வல்லமையை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரான இறைவா, உலகில் பல்வேறு நோய்களாலும், பெயர் தெரியாத புதிய வியாதிகளினாலும் துன்புறும் மக்களையும், மரணப்படுக்கையில் உள்ளவர்களையும் உமது கருணை மற்றும் அன்பை அவர்கள்மேல் பொழிந்து குணப்படுத்துமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 11.07.2018 தூய பெனடிக்ட் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

"ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் எவரோ அவருக்குத் தாம் தேர்ந்துக்கொண்ட வழியை அவர் கற்பிப்பார்" (தி.பா. 25:12).

இப்புனிதர் புகழ்பெற்ற உரோமை நகரில் உயர்க்கல்வி பெற்றவர். கல்வி பயின்றுக் கொண்டிருந்தபோது அங்கே படிக்க வந்த இளைஞர்களிடையே நிலவும் தீமைகளைக் கண்டு மனம் வருந்தினார். அவர்களின் தீயச் செயல்களைக் கண்டு அவர்களுடன் தங்காமல் உரோமையை விட்டுச் சென்றார். இச்சூழலில் தம்மை இறைவனுக்கு அர்ப்பணிக்கத் திட்டமிட்டார். மலையில் தவமிருக்கச் சென்றபோது அங்கே எம்மானூஸ் என்ற தவமுனிவரைச் சந்தித்தார். இம்முனிவர் காட்டிய வழியில் 3ஆண்டுகள் தாம் முனிவராக தவமிருந்தார். இவரின் தவவாழ்வை அறிந்து பலரும் அவரைத் தேடிவந்தனர். இதன் விளைவாக தோன்றியது தான் "பெனடிக்ட் துறவற சபை". மேலை நாடுகளின் வழக்கப்படி அடிமைகள் மட்டுமே வேலை செய்யவேண்டும் என்ற கருத்தைக் கண்டித்து துறவற சபையை ஏற்படுத்தும்போதே "ROA..." என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். "செபமும் உழைப்பும்" என்பதே இதன் பொருள். தூய பெனடிக்ட் தான் திருவழிபாட்டு முறைக்கு அடித்தளமிட்டார். முறையான ஆராதனையை செய்வதில் இச்சபையினரே சிறந்தவர்கள். இவர் தனது இறப்பை 6 நாட்களுக்கு முன்னரே அறிவித்தார். தனக்கென்று கல்லறைக் குழி தோண்டச் செய்தார். திருவுணவு பெற்றபின் சிற்றாலயத்தில் நின்று தன் கைகளை உயர்த்தி செபித்தபடியே உயிர் துறந்தார். இவரின் பக்தி, உழைப்பு, செபிக்கும் பண்பு, பிறருக்கு உதவுதல் போன்ற நற்பண்புகளை நாமும் பின்பற்ற இத்திருப்பலியில் இறைவனிடம் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம்வல்ல அன்புஇறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் நீர் விட்டுச்சென்ற திருஅவையின் மக்களை கிறிஸ்துவுக்கு இறுதிவரை சாட்சியாக வாழும் வழியை ஏற்படுத்திக்கொடுக்கவும், இவர்கள் அனைவருக்கும் நல்ல உடல் சுகத்தைத் தந்தருளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, இன்றைய திருவிழா நாயகர் தூய பெனடிக்ட் போல நாங்கள் அனைவரும் உம்முடைய தெய்வீகப் பிரசன்னத்தால் நிறையவும், ஆன்மீக வாழ்விலே வளர்ச்சியடையவும் உம்மில் என்றும் நிறைவைக் காணவும் அருளைத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நலன்களின் நாயகனே இறைவா, திருமுழுக்குப் பெற்ற நாங்கள் ஒவ்வொருவரும் ஆராதனை, திருப்பலி, செபவழிபாடு போன்ற புனித காரியங்களில் முழுமையாக எங்களை அர்ப்பணித்துக்கொண்டு, எங்கள் வாழ்வின் இறுதிவரை உம்மையே பற்றிக்கொள்ளும் உள்ளத்தைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 13.07.2018 தூய ஹென்றி திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது புனித ஹென்றியின் திருவிழாவை சிறப்பிக்கிறது. ஜெர்மனியில் உள்ள பவேரியாவில் 972, மே 6 அன்று பிறந்தார். பவேரியாவின் கோமகனாக இருந்த இவருடைய தந்தையின் பெயர் இரண்டாம் ஹென்றி. ஜிசெல்லா என்பது இவரது தாயாரின் பெயர். ரீகன்பெர்க் ஆயர் வோல்ஃப்காஸ் என்பவரின் பொறுப்பில் வளர்ந்த இந்த புனிதர் அவரது வழிகாட்டுதலில் கல்வி பயின்றார். குருத்துவ வாழ்வு வாழ விரும்பினார். திடீரென தந்தை இறந்ததால் தந்தையின் பதவிக்கு இவரை 995ல் தேர்ந்தெடுத்தார்கள். பவேரியா நகரின் கோமகனாக இருந்த ஹென்றி 1002ம் ஆண்டு ஜெர்மனியின் அரசரானார். குணகுந்தா என்ற பெண்மணியை தமது வாழ்க்கைத் துணையாக்கிய ஹென்றிக்கு குழந்தைகள் பிறக்காவிட்டாலும், மனமகிழ்வுடன் குடும்பம் நடத்தி சிறப்புடன் ஆட்சி செய்து வந்தார். திருத்தந்தை எட்டாம் ஆசீர்வாதப்பர் 1014 பிப்ரவரி 14 அன்று ஹென்றியை உரோமையின் பேரரசராக முடிசூட்டினார். தன் ஆட்சிகாலத்தில் கிறிஸ்தவ மதத்தைக் காக்க இத்தாலியில் கிரேக்கர்களுடனும், லொம்பார்டுகளுடனும் போராடினார். திருஅவைக்கும் அரசுக்கும் இடையே நல்லுறவை வளர்த்தார். மனைவியை இழந்த பிறகு சில காலம் தனிமையில் வாடினார். கடைசி காலங்களில் சிறிது ஊனமுற்ற காலுடன் இறைவனின் அன்புப்பிள்ளையாக வாழ்ந்து 1024, ஜூலை 13 அன்று இறைவனைப்பற்றிக் கொண்டார்.

இவரைத் திருத்தந்தை 3ம் யூஜின் 1146ல் புனிதராக உயர்த்தினார். இந்தப்புனிதர் மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகிறார்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களது பணிவாழ்வில் விவேகத்தோடு செயல்படவும், துணிவையும், அமைதியையும், அணிகலன்களாகக் கொண்டு செயல்படுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. உறவை வளர்க்கும் உன்னத இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்கள் தூய ஹென்றியைப்போல தங்களின் பணியின் மேன்மையை உணர்ந்தவர்களாய், ஏழை எளிய மக்களுக்குத் தங்களால் முடிந்தளவு அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் எண்ணத்தையும், மனநிலையையும் அவர்களுக்கு அளித்து, ஏழைகளின் வாழ்வில் மகிழ்வினைக் கண்டிட தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. துணை நிற்கும் தூய தந்தையே, மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலரான தூய ஹென்றியின் திருநாளைக் கொண்டாடும் நாங்கள், எங்கள் அன்பியக்குடும்பங்கள் மற்றும் பங்குத்தளங்களில் இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய சலுகைகளை பெற்றுத்தரும் கருவிகளாக செயல்பட எங்களை ஆசீர்வதித்து நல்வழி நடத்திட வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 15.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 15ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி சம்பந்தன்

I. ஆமோ. 7: 12-15 II. எபே. 1: 3-14 மாற்கு 6: 7-13

இறையேசுவில் நம்பிக்கையுள்ள இறைமக்களே, திருஅவையானது இன்று ஆண்டின் பொதுக்காலம் 15ஆம் ஞாயிற்றைச் சிறப்பிக்க அழைக்கின்றது. இன்றைய வாசகங்கள் அனைத்தும் இறைவனின் பணிக்காக இறைவனால் தேர்ந்துக்கொள்ளப்பட்டவரை யாராலும் எதுவும் செய்ய இயலாது என்பதை சுட்டிக்காட்டுகின்றது. இறைவாக்கினர் ஆமோசை பெத்தேலின் குருவாகிய அமத்சியா எவ்வளவு மதிப்புக்குறைவாக பேசினாலும், ஆண்டவர் அவரை தேர்ந்தெடுத்து, இஸ்ரயேல் மக்களுக்கு இறைவாக்கு உரைத்திட ஆசி வழங்குகின்றார். அவரும் தூய ஆவியாரின் துணையுடன் செயல்பட்டார். தூய பவுலும் எபேசியருக்கு எழுதிய மடலில், உலகம் தோன்றுவதற்கு முன்பே தந்தையாகிய கடவுள் நம்மீதுள்ள அன்பினால் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் சொந்த பிள்ளைகளாக முன் குறித்தார். அதனால் நாம் இறைவனின் மீட்பில் பங்கு பெறுகின்றோம் என்றும், இதற்கு இயேசு

கிறிஸ்துவின் பாடுகள் நமக்கு இறையாட்சியில் பங்களிக்கின்றது என்றும் நம் அழைத்தலின் மேன்மையை எடுத்துரைக்கின்றார். நற்செய்தியாளர் மாற்கும் தன் நற்செய்தியில் இயேசு சீடர்களை அழைத்து, இருவர் இருவராக அனுப்பி "கையில் ஒன்றும் வைத்திருக்க வேண்டாம். மிதியடியும், அணிந்திருக்கும் அங்கி ஒன்றே போதும்: என்று கூறி, இறைப்பணி செய்ய கலக்கம், தயக்கம் வேண்டாம் என்று அனுப்புகின்றார். இறைவனால் அழைக்கப்படுபவர்களை பாதுகாக்கும் பொறுப்பை இறைவனே எடுத்துக் கொள்கிறார். நாம் செய்ய வேண்டியது அவர் நமக்குக் கொடுத்த பணியை உண்மையோடும், நீதியோடும் செய்து இறையாட்சியை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்பதே. கடவுளின் திருவுளத்திற்கு பணிந்து நாம் தூயோராய் வாழ்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாய் இறைவாக்குரைக்கும் பணியைச் செயலாற்ற வேண்டும் என்ற சீரிய நோக்கோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. இறையாட்சியின் திறவுகோலே இறைவா, உம் வழித் தோன்றலாகிய திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் யாவரும், உம்முன் தூயோராய் அணிவகுக்க வேண்டும் என்னும் நோக்கத்தை மனதில் கொண்டு முன்மாதிரியாக வாழ்ந்து வளரும் சமுதாயத்தினரை இயேசு கிறிஸ்துவின் வழியில் நடத்திட அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. நித்திய ஆதாரமே இறைவா, குடும்பங்களில் ஏற்படும் பலதரப்பட்ட பிரச்சனைகள், கடன்தொல்லைகள், பலவீனங்கள் இவற்றினால் ஏற்படும் இடர்பாடுகள், பிரிவினைகள் அதனால் ஏற்படும் உறவுகளின் இழப்புகள் இவற்றினைக் களைந்து குடும்பத்தினை நித்திய விளக்காக ஒளியேற்றி, பாதுகாக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. சுகமளிக்கும் வள்ளலே எம் இறைவா, திடீர் விபத்துகளினாலும், உடல்நலக் குறைவுகளினாலும் மருத்துவமனைகளில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் மக்களைக் காத்தருள வேண்டுமென்றும், வீதியோரங்களில் அனாதைகளாக நலிந்துக்கொண்டிருப்போரையும், பெற்றப் பிள்ளைகளால் விரட்டப்பட்டு முதியோர் இல்லங்களிலும், காப்பகங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் பெற்றோரைப் பாதுகாத்து, வழிநடத்த வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.

## 16.07.2018 தூய கார்மேல் அன்னை திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசே. 17: 22-24 II. 2கொரி: 5: 6-10 மாற்கு 4: 26-34

கிறிஸ்து இயேசுவில் பேரன்பிற்குரியவர்களே, இன்று நாம் தூய கார்மேல் அன்னையின் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். கார்மேல் என்பதற்கு எபிரேய மொழியில் "அழகிய தோட்டம்" என்பது பொருள். இந்த

மலையில்தான் இறைவாக்கினர் எலியா, போலி இறைவாக்கினர்களுக்கு உண்மை இறைவன் யார் என்பதை வெளிக்காட்டினார். எலியாவைப் பின்பற்றி நிறைய துறவிகள் இந்த மலைக்குச் சென்று "கார்மேல் மலைத் தூய துறவிகள்" என்ற நிலையில் வாழ்ந்து வந்தனர். கார்மேல் சபையின் தலைமைத் தந்தையாக இருந்த புனித சைமன் ஸ்டோக் என்பவருக்கு அன்னை மரியா 1251 ஜூலை 16 அன்று காட்சி கொடுத்தார். அக்காட்சியில் சைமனிடம் உத்ரியம் ஒன்றைக் கொடுத்த கன்னிமரியா "இது கார்மேல் துறவிகளுக்கு வழங்கப்படும் தனிச்சலுகை. இதைப் பக்தியோடு அணிபவர்கள் இம்மையிலும், மறுமையிலும் எவ்விதத் துன்பத்திலும் நரக நெருப்பிலும் அல்லலுற மாட்டார்கள்" என்றார். அன்னை காட்சி கொடுத்த அந்த நாளே கார்மேல் மலை புனித கன்னிமரியின் விழாவுக்கான நாளாக குறிக்கப்பட்டது. இவ்விழாவை முதலில் திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்துஸ் 1587ம் ஆண்டு அங்கீகரித்தார். திருத்தந்தை 13ம் ஆசீர்வாதப்பர் இலத்தீன் திருச்சபை முழுமைக்கும் கார்மேல் மலைப் புனித கன்னிமரியின் திருவிழாவைக் கொண்டாட 1726, செப்டம்பர் 27 அன்று வழிவகுத்தார். கார்மேல் அன்னையின் பரிந்துரையை நாடுவோம், உத்ரியம் அணிந்து நரக நெருப்பிலிருந்து நம் குடும்பத்தை பாதுகாப்போம் இறையருள் நாடி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாக்குறுதிகளை நிறைவேற்றும் வானகத்தந்தையே, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் நீர் அளித்த வாக்குறுதிகள் நிறைவேறும் என்ற நம்பிக்கைக் கொண்டவர்களாகவும், அதனைப் பெற்றுக்கொண்டு தங்கள் வாழ்வையும், பிறர் வாழ்வையும் மேம்படுத்திக்கொள்ள முன்வருபவர்களாகவும் விளங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எல்லா நலன்களுக்கும் ஊற்றான இறைவா, இன்று தங்களின் உரிமைக்கான போராட்டங்களில் மக்கள் தங்களையே அர்ப்பணித்து ஈடுபடவும், தீங்கை எதிர்த்து போராடவும், ஆட்சியாளர்கள் மக்களின் குரலுக்குச் செவிமடுத்து அவர்தம் குறைகளைத் தீர்க்கவும் வேண்டிய தாராள மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்னை மரியாவை தாயாகத் தந்த இறைவா, நாங்கள் உத்ரியத்தையோ, உத்ரிய சுரூபத்தையோ தரித்திருந்தால் மட்டும் போதாது, மாறாக, உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழத் தேவையான அனைத்து வரங்களையும் எங்களுக்கு அளித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.07.2018 ஆண்டின் பொதுக்காலம் 16ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

I. எரே. 23:1-6 II. எபே. 2: 13-18 மாற்கு 6: 30-34

இறையேசுவில் பிரியமானவர்களே, இறைவன் கண்ணுக்கு புலப்படாதவர் அவர் மனித உறவுக்கும் அப்பாற்பட்டவர் என்று தாங்களே எதிர்மறையான கருத்துக்களை வைத்துக்கொண்டு உண்மை இறைவனை உதறித்தள்ளி வாழ்ந்தவர்கள் இஸ்ரயேல் மக்கள். எனவேதான் இறைவன் இம்மக்களை காக்கும் மேய்ப்பராக வழிகாட்டும் நல்ல ஆயனாக தன்னை வெளிப்படுத்துகிறார். இரண்டாம் வாசகத்தில் தூய பவுல் எபேசு மக்களிடையே நிலவி வந்த ஏற்றத்தாழ்வுகளை எடுத்துரைக்கின்றார். இயேசுவின் பெயரால் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் சமம் என்று உணர்த்துகிறார். எனவே இயேசு நல்ல தலைவர், வழிகாட்டி என்பதை எபேசு மக்களுக்குத் தெளிவாக எழுதுகிறார். நற்செய்தி வாசகத்தில் இயேசு தன்னையே நல்ல ஆயனாக அறிமுகப்படுத்துகிறார். யூதமக்கள் உரோமையரசின் மக்களாலும், தலைமைக் குருக்கள், பரிசேயர்கள், சதுசேயர்கள் போன்றவர்களாலும் ஏமாற்றப்பட்டு, தங்களின் மன அமைதியை இழந்தவர்களாய், வஞ்சிக்கப்பட்டு வாழ்ந்து வந்தார்கள். என்றாவது மீட்பு வராதா என்று காத்திருந்தார்கள். இச்சூழ்நிலையில் இயேசுவின் போதனைகள் யூத மக்களுக்கு ஆறுதல் தந்தன. இயேசு தன்னைத் தேடிவந்த மக்கள்மீது பரிவுகொண்டார். இவரும் தன்னை ஆயனாக வெளிப்படுத்துகிறார். இயேசு களைப்புடன் வந்த சீடர்களை ஓய்வெடுக்கச் சொல்வது, இயேசு பணியாளர்களின் உழைப்பை மட்டுமே கருத்தில் கொள்ளாமல் அவர்களையும் ஓய்வெடுக்கச் சொல்கிறார். சிறப்பாக தனிமையில் ஓய்வெடுக்கச் சொல்வது. ஒவ்வொரு செயலுக்கும் நேரம் ஒதுக்கியதுபோல இறைவனோடு தனித்திருக்கவும் நாம் நேரம் ஒதுக்க வேண்டும் என்ற உண்மையை இயேசு நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். எனவே அமைதி நிறைந்த நற்செய்தியாளர்களாகவும், நீதி நிறைந்த ஆயர்களாகவும் மாறுவோம் என்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனாம் இறைவா, நீர் விட்டுச்சென்ற திருஅவையின் மக்களை நீர் தேர்ந்தெடுத்துள்ள திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் உமது அருளும், ஆசீரும், தூய ஆவியாரின் வழிநடத்துதலும் பெற்று அனைவரையும் நல்வழி நடத்தும் ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, நாங்கள் பணிசெய்யும் இடங்களிலும், சந்திக்கும் மனிதர்களிடத்திலும், அன்றாடம் வாழ்வை நடத்தும்

நிலைகளிலும் நாங்கள் எங்களை முதன்மைப்படுத்தாமல் அனைவரையும் சமமாகக் கருதவும், ஏழை எளியவர்களிடமும் உதவி தேவைப்படுபவர்களிடமும் பரிவும், அன்பும் காட்டும் அன்புள்ளம் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, எங்கள் ஒவ்வொருவரிடமும் நீர் இரக்கமாயிரும். எங்களுடைய துன்ப துயர நேரங்களிலும், நாங்கள் வலுவிழந்து சோர்ந்து போகும் நேரங்களிலும், வாழும் வழி தெரியாத நேரங்களிலும் எங்களுக்கு நல்ல ஆயனாக இருந்து எங்களுக்கு நல்வழியும் ஆறுதலும், தேறுதலும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.07.2018 திருத்தூதர் தூய யாக்கோபு திருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய குலமே, இன்று நாம் திருத்தூதர் தூய யாக்கோபுவின் திருநாளைச் சிறப்பிக்கின்றோம். தூய யாக்கோபு கலிலேயாவிலுள்ள பெத்சாய்தா நகரில் செபதேயு, சலோமி என்ற பெற்றோருக்குப் பிறந்தவர். இவரின் சகோதரர் தூய யோவான். இயேசுவின் முதல் சீடரானவர். தூய யாக்கோபும், தூய யோவானும் மீன்பிடிக்கும் வலைகளை பழுது பார்த்துக்கொண்டிருந்தபோது இயேசுவின் அழைப்பால் தூண்டப்பெற்று அவருடன் இணைந்தவர்கள். முதலில் இவர் தூய திருமுழுக்கு யோவானின் சீடனாயிருந்தவர். இயேசுவின் ஒவ்வொரு புதுமைகளின்போதும், தபோர் மலையில் மறுரூபமானபோதும், இரத்த வியர்வை வியர்த்து பூங்காவனத்திலிருந்த போதும் இயேசுவோடு உடனிருந்தவர். தூய ஆவியானவரைப் பெற்ற பிறகு, உறுதியுடனும், சவாலுடனும், திருத்தொண்டு புரிய ஸ்பெயின் நாட்டிற்கும், யூதேயாவிற்கும் மாறி மாறி திருப்பயணங்களை மேற்கொண்டவர். அதனாலேயே இவர் திருப்பயணங்களின் பாதுகாவலர் என்றும் போற்றப்படுகிறார். ஸ்பெயின் நாட்டு மக்கள் இவரை கிளிஞ்சல்களை ஏந்தி வரவேற்றனர். இவரது வெள்ளைக் குதிரையும், கிளிஞ்சலும் இவரது அடையாளங்களாக மாறின. இயேசுவின் முதல் வேதசாட்சியாக மன்னன் ஏரோது அக்ரீப்பாவால் தலைவெட்டி கொல்லப்பட்டார். இயேசுவோடு வாழ்ந்த இவரின் இறப்பு கி.பி. 44ஆம் ஆண்டு இயேசுவோடு ஒன்றிக்க விரும்பும் நாம் அவர் அடைந்த பாடுகளையும், அவர் பருகிய துன்ப கிண்ணத்திலிருந்து பருகவும் ஆர்வம் கொண்டவர்களாய் வாழ விரும்பி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நற்செய்தியின் நாயகனே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் இயேசுவின் சீடர்களாய் வாழ்ந்து உருவெடுத்த முதல் வேதசாட்சியான தூய யாக்கோபு போன்று இயேசுவின் நற்செய்தியைப் போதிக்கும் பணியில் முழுமனதோடு ஒன்றித்து சேவைப் புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நிலைவாழ்வின் அடித்தளமே இறைவா, தற்போதுள்ள அமைதியற்ற சூழ்நிலைக்குக் காரணமான பிரச்சனைகள், ஏமாற்றங்கள், உயிரிழப்புகள் இவற்றை போராடி ஜெயிக்கும் உள்ள உறுதியையும், உடல் வலிமையையும் தருமாறும், நாட்டின் பொறுப்பாளர்கள் நல்ல மாற்றங்கள், முறையான வழிகளைக் கொண்டு நிலையான அமைதி கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வின் ஒளியே இறைவா, கிறிஸ்துவத்தில் வாழும் மக்களாகிய நாங்கள் உம்மில் வாழவும், எந்த தீய சக்திகளுக்கும் அஞ்சாமல், எங்கள் கடமைகளை சரிவர செய்ய தகுதியுள்ளவர்களாக என்றென்றும் உம் ஒளியில் மிளிர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பு இறைவா, இன்றைய இளைஞர்களையும், இளம் பெண்களையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் தங்கள் வாழ்வின் இலக்கை நோக்கி நேரிய வழியில் நடக்கவும், எதிர்காலத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் இன்றே ஏற்படுத்திக்கொள்ளக் கூடிய நல்ல உள்ளத்தையும், தைரியத்தையும் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 26.07.2018 தூய சுவக்கின் அன்னம்மாள் திருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**"மாண்புமிகு பெற்றோர் மணவாழ்க்கையின் மாதிரி"**

எனது அருமையான சகோதர சகோதரிகளே, இன்று நம் தாயாம் திருஅவை அனைத்து தாத்தா பாட்டிகளுக்கும் பாதுகாவலரான தூயவர்கள் சுவக்கின் அன்னம்மாள் விழாவைக் கொண்டாடுகிறது. இவர்கள் நம் தாயாம் அன்னை மரியாளின் பெற்றோர்கள். இவர்கள் தாவீதின் வழி வந்தவர்கள். குழந்தை பாக்கியமில்லாமலிருந்த இவர்களுக்கு இறைத்தூதர் ஒருவர் தோன்றி, உங்களுக்குக் குழந்தைப் பிறக்கும் என உறுதியளித்தார். சுவக்கின் அன்னம்மாவிடம் நடந்ததைக் கூற, அதே தேவதூதர் தனக்கும் கூறினார் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். வாக்களித்தபடியே அழகுமிகு பெண் குழந்தை பிறந்தது. "மரியா" எனப் பெயரிட்டனர். நேர்ந்து கொண்டபடியே மூன்று வயதில் மரியாவை ஆலயத்தில் அர்ப்பணிக்கிறார்கள். மேலும் தமது செல்வத்தை கடவுளுக்கு ஒருபாகமும், ஏழைகளுக்கு ஒருபாகமும், தங்களின் வாழ்வாதாரத்திற்கு ஒருபாகமும் பிரித்துக் கொடுக்கிறார்கள். சில ஆண்டுகளில் சுவக்கின், அன்னம்மாள் இருவரையும் இறைவன் அழைத்துக் கொள்கிறார். தூயவர்களான சுவக்கின் அன்னம்மாள் கடவுள் பக்தியிலும், பயத்திலும், இல்லற வாழ்க்கையிலும், பிரமாணிக்கமாக வாழ்ந்ததுபோல், நாமும் வாழ்வோம் என வாக்களித்து, இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் தலைவராகிய இயேசுவே, திருஅவையில் பணியாற்றும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரையும் உமது மேய்ச்சலின் மக்களை உம் திருவுளத்தின்படி நேரிய வழியில் நடத்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. மன்னிக்கும் தந்தையே, உமது மக்களாகிய எங்களை நீர் மன்னிப்பது போல நாங்களும் எங்களுக்கு எதிராக தீமை செய்தவர்களை மன்னித்து, மறந்து உமது அன்பு மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. முதியோர்களை காத்து இரட்சிக்கும் இறைவா, இன்றைய நெருக்கடியான உலக வாழ்க்கையில் பிள்ளைகளுக்கு தொந்தரவாக இருப்பதாகத் தமது பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு, கடவுளுக்கு விரோதமான வாழ்க்கையை வாழும், குடும்பங்களுக்கு இறைஞானம், இறைபக்தி, இறைபயம் தந்து, பெற்றோருடன் இணைந்து வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நல்ல விதைகளையே இப்பூமியில் விதைக்க வந்த இறைமகனே, நாங்களும் உமது வார்த்தைகளை கேட்டு அதன்படி வாழ்ந்து பத்துக்கு நூறாக பலன்தந்திடவும், துன்பத்தில் துடிப்பவர்களுக்கு ஓடிச்சென்று உதவிடும் நல்ல மனதினை தந்தருளும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 28.07.2018 தூய அல்போன்சா திருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி வில்சன்

"கேரள நாட்டின் கமலம்" என்று அழைக்கப்படும் இவர் பிறந்தது முதல் தன் இறுதிநாள் வரை தொடர் துன்பம், நோய் இவற்றில் இறைவனோடு இணைந்திருத்தல், அவருக்காகவே வாழ்தல், பணிபுரிதல் என்பனவற்றில் எவ்வளவு உறுதியாயிருந்தார் என்பது அவரது வாழ்வைத் தியானித்தால் நமக்குப் புரியும். பிறக்கும்போதே ஓர் அதிர்ச்சியில் அன்னைக்குக் குறைப் பிரவசமாகப் பிறந்தார். அப்போதே அன்னையை இழந்தார். சிற்றன்னையின் கொடுமைக்கு ஆளாகினார். 4வயதிலேயே தோல்நோய்க்கு ஆளானார். பள்ளிப்படிப்பு முடிந்ததும் சித்தி இவருக்குத் திருமணம் செய்ய முடிவெடுத்தார். மாறாத தழும்பிருந்தால் தம்மை யாரும் திருமணம் முடிக்க முன்வரமாட்டார்கள் எனக் கருதி அடுப்பு நெருப்புக்குழியில் தன் இரு கால்களையும் விட்டு நீங்காத தழும்புகளாய் கருக்கிக் கொண்டார்.

இதன் விளைவாக கிளாரிட்ட துறவற சபையில் சேர்ந்து பர்ணஞானம் மடத்தில் பணிபுரிந்தார். அனைவரிடத்திலும் தொண்டு மனப்பான்மையோடும் புன்முறுவலோடும் பணிவிடை புரிந்து வந்தார். அப்போது மிகவும் உடல்நலக்குறைவு ஏற்பட்டு சிறுமலர் தெரசாவிடம்

மன்றாடி சுகம் பெற்றார். இவரது சகோதரிகளே இவர் புண்ணியவதி வேடம் போடுகிறார் என அவமானப்படுத்தினர். ஆனால் தூய அல்போன்சா எப்போதும் சிலுவைப் பாடுகளையே தியானித்து "நான் கோதுமை மணி. அப்பமாக மாற்றப்பட வேண்டும்" என சிரித்த முகத்தோடு கூறுவார். இவருக்கு முத்திபேறு பட்டம் திருத்தந்தை 2ம் ஜான் பவுலால் 1986ம் ஆண்டு கோட்டயத்தில் வழங்கப்பட்டது. புனிதர் பட்டம் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரால் 2008ம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் கொடுக்கப்பட்டது. இவர் நமக்கு ஓர் உன்னத வழிகாட்டி. நாமும் இவரைப்போல் எவ்வித சூழலிலும் இறைவனில் ஒன்றித்திருந்தால் தீயவைகளை நம்மிடமிருந்து அகற்றி நல்மணிகளாக பயனுள்ள கோதுமை மணிகளாக நம்மை பயன்படுத்தி அவரது களஞ்சியத்தில் இணைத்துக் கொள்வார் என்ற ஆழ்ந்த விசுவாசத்தோடு இத்திருப்பலியில் பக்தியோடு இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, உமது திருப்பணிக்காக தனித்தன்மையோடு தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் திருஅவையின் பணியாளர்களான திருத்தந்தை, பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர்கள் அனைவரும் தங்கள் இறையழைத்தலின் மேன்மையை உணர்ந்து, இறைமக்களை இயேசுவின் அன்பு, சமாதானம், பொதுநலவழியில் நடத்திச் செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவருக்காகவும் வேண்டுகிறோம். தூய அல்போன்சா தனது வாழ்வில் பல்வேறு நோயினால் அவதிப்பட்டிருந்தாலும், இறைவன்மீது கொண்ட நம்பிக்கையால் தனது நோய்களிலிருந்து விடுபட்டதுபோல நோயுற்றோரும் உம்மீது கொண்ட நம்பிக்கையினால் நலம்பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் உறைவிடமே இறைவா, எங்கள் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்காகவும் செபிக்கின்றோம். நீரே அவர்களுடனிருந்து உம் அன்பு நெறியின்படி வழிநடத்தி உமக்கேற்ற வாழ்வு வாழவும், உடல்உள்ள ஆன்ம சுகமளித்து காத்து வழிநடத்தவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.07.2018ஆண்டின் பொதுக்காலம் 17ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. D.V.R. ராஜா

I. 2அர. 4: 42-44 II. எபே. 4: 1-6 யோவா. 6: 1-15

இறை இயேசுவில் இனியோரே, பொதுக்காலம் 17ஆம் ஞாயிறான இன்று நம் திருஅவையானது இறைவனின் இரக்கத்தையும், பரிவையும் பற்றி ஆழமாக சிந்திக்க அழைக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் இறையடியார் எலிசாவிடம் கொண்டு வந்துக் கொடுத்த இருபது கோதுமை ரொட்டிகளை நூறு பேர் வயிறார உண்டபின்னும் ரொட்டிகள் மீதி இருந்த நிகழ்ச்சியையும், இன்றைய நற்செய்தியில் இயேசு ஐயாயிரம் பேர்களுக்கும்

மேலாக இருந்த மக்களுக்கு ஐந்து அப்பமும் இரண்டு மீன்களைக் கொண்டு உணவளித்து, அனைவரும் உண்டபின் மீதியான அப்பத்தை பன்னிரெண்டு கூடைகள் நிறைய சேகரித்தனர் என்பதையும், நாம் தியானிக்கின்றோம். நம் இறைவன் நம்மீது கொண்டுள்ள அன்பு, இரக்கம், பரிவு, தாயுள்ளத்தை இன்றைய இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் நமக்கு தெளிவூட்டுகின்றன. ஆண்டவரின் அன்பை சுவைக்கும் நாம் முழுமனத்தாழ்மையுடனும், அமைதி, பொறுமை, அன்புடன் ஒருவரையொருவர் தாங்கி ஒருமைப் பாட்டைக் காத்துக் கொள்ளவும், பெற்றுக்கொண்ட அழைப்பில் நிலைத் திருக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம். நாம் பலராக இருந்தாலும் இறைவனின் அன்பில் நாம் அனைவரும் ஒருவரே, என்பதை உணர்ந்து நமது எதிர்நோக்கும், நம்பிக்கையும், திருமுழுக்கும் ஒன்றே என்பதை விசுவசித்து இன்றையத் திருப்பலியில் நமது தந்தை இறைவனிடம் நீரே எல்லாவற்றுக்கும் மேலானவர், எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர், மற்றும் எல்லாருக்குள்ளும் இருப்பவர் என்பதை புரிந்து கொள்ளும் வரத்தை பொழியவேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருச்சபைக்காக:** அன்பு இறைவா, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், இறைவன் ஒருவரே என்பதை உலகமக்கள் புரிந்துக் கொள்ள ஒருமனதோடு இவர்கள் பணியாற்ற உமது அருளையும், வல்லமையையும் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. **பங்கு மக்களுக்காக:** அன்பு இறைவா, எம் பங்கு மக்கள் அனைவரையும், அவர்களின் அன்றாடம் சந்திக்கும் இன்னல்களிலிருந்து பாதுகாத்து, பிள்ளைகளின் கல்விக்காக கடனாளியாக உள்ள குடும்பங்களை நீர் தாமே உற்று நோக்கி, நல்ல பொருளாதார வளர்ச்சியை தந்து உமது பரிவன்பினால் வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. **இளையோருக்காக:** அன்பு இறைவா, இருபால் இளையோரும் கல்வியில் கவனம் செலுத்தி அவரவர் விரும்பியத் துறையை பெற்று வாழ்வில் உயர்வடையவும், நல்ல வேலைவாய்ப்புகள், தொழில்கள் வாய்க்கவும், குடும்பங்கள் உயர்வடையவும் அருள் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. **நாட்டு தலைவர்களுக்காக:** விண்ணகத் தந்தையே இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்களை ஆசீர்வதித்தருளும். அவர்கள் எங்களை நேரிய பாதையில் வழிநடத்த தேவையான ஞானத்தையும், அறிவாற்றலையும் அளித்து, எங்களின் தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவேற்றக் கூடிய எண்ணத்தையும், தாராள மனதையும் தந்து அசீர்வதித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 31.07.2018 தூய லொயோலா இஞ்ஞாசியார் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

இறை இயேசுவில் அன்பார்ந்த இறைமக்களே, இன்றைய தினம் நாம் திருப்பலியில் தூய லொயோலா இஞ்ஞாசியார் திருவிழாவைக் கொண்டாட இங்கு கூடியுள்ளோம். இஞ்ஞாசியார் 26வயது வரை பெர்டினாண்ட் இஸபெல்லாவின் அரசவையில் போர் வீரராகப் பணியாற்றினார். ஒருமுறை போரில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக தனிமைக்குத் தள்ளப்பட்டார். தனிமையிலிருந்த இஞ்ஞாசியாருக்கு உதவியாக சில புத்தகங்களை நண்பர்கள் வாசிக்கக் கொடுத்தார்கள். புத்தகங்களை வாசிக்கத் தொடங்கிய இஞ்ஞாசியாருக்குத் தனிமைத் தொலைந்து மனக்கலக்கம் தொடங்கியது. லுபோல்ப் எழுதிய புத்தகம் மனதை மாற்றியது. நான் இனி கிறிஸ்துவின் போர் வீரராக வாழ்வேன் என்று உறுதிகொண்டார். அன்னை மரியா பாலன் இயேசுவுடன் இஞ்ஞாசியாருக்குக் காட்சியளித்து அவருடைய உந்துதலை உறுதிப்படுத்தினார். எருசலேம் சென்று அன்னை மரியாவுக்கு வணக்கம் செலுத்தி ஒப்புரவு அடையாளத்தில் பங்கு கொண்டு தம் போர்க்கருவிகளைப் பீடத்தில் வைத்து தியானம் செய்தார். அவர் "ஆன்மீகப் பயிற்சிகள்" என்னும் நூலை தியானம் செய்யும் அனைவருக்காகவும் எழுதினார். 6பேருடன் சேர்ந்து 1534ல் ஆகஸ்ட் 15 அன்று புதிய துறவு அமைப்பை இஞ்ஞாசியார் உருவாக்கினார். இவ்வாறு இயேசு சபை உலகிற்குள் உதயமானது. இப்பேர்ப்பட்ட புனிதரின் நினைவு திருப்பலியில் கலந்து கொள்கின்ற நாம் ஆழ்ந்த விசுவாசமும், கடவுள் பக்தியும் வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் நீர் பகர்ந்த சான்றுக்கேற்ப அர்ப்பண வாழ்வில் உறுதியோடு வாழத் தேவையான அருளைப்பொழிய வேண்டுமென்று தூய இஞ்ஞாசியாரின் பரிந்துரை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கமுள்ள இறைவா, எம் பங்கிலுள்ள மக்கள் யாவரும் தொடர்ந்து விசுவாச வாழ்வில் பயணிக்கவும், அழிந்துபோகக் கூடியவற்றை நாடாமல் நிலைவாழ்வு தரும் ஆவிக்குரியவற்றையே நாடவும், தங்களின் பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டுமென்று தூய இஞ்ஞாசியாரின் பரிந்துரை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. ஆறுதலான எம் இறைவா, நாட்டில் நடக்கும் விபத்துக்களில் உற்றார் உறவினரையும், பெற்றோரையும் இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு நீர்தாமே ஆறுதலையும் தேற்றுதலையும் தந்து இழப்பை ஈடுசெய்யக் கூடிய பல நலன்களைத் தந்து தேற்றிட வேண்டி தூய இஞ்ஞாசியாரின் பரிந்துரை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## சென்னை சலேசிய மாநிலமும் தூய தோமையாரும்

திரு. ஜான் அலெக்ஸ்

ஜூலை மாதம் சென்னை சலேசிய மாநிலத்திற்கு இன்னொரு சிறப்புமிக்க மாதமாகும். ஆம் இம்மாதம் 3ம் தேதி அதன் பாதுகாவலரான தூய தோமாவின் பெருவிழாவினை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் சிறப்பிக்கும் மாதமாகும். இந்நேரத்தில் நம் நாட்டிற்கு கடவுளின் நற்செய்தியை கொண்டு வந்த தூய தோமாவைப்பற்றி சில முக்கியமான தகவல்களை தெரிந்துக் கொள்வதும் அந்த நற்செய்தியின் விழுமியங்களை நமது வாழ்வால் பிறருக்கு எடுத்துக்காட்டவும், குறிப்பாக இளையோருக்கு கொண்டு சேர்ப்பதும் நமது கடமையாகும்.

**நம் பாதுகாவலர் - தூய தோமா :** இந்திய சலேசிய மாநிலம் தூய தோமாவை பாதுகாவலராக கொண்டு 1926ம் ஆண்டு அதிகாரப்பூர்மாக தோற்றுவிக்கப்பட்டது. அது மேலும் வளர்ச்சிப் பெற்று 1934ல் வடக்கு மற்றும் தெற்கு சலேசிய மாநிலங்களாக தனித்தனியே பிரிக்கப்பட்டது சென்னை ஏற்கனவே தோமாவின் மாநகராக இருந்த காரணத்தினால் தென்னிந்திய சலேசிய மாநிலத்திற்கு தூய தோமாவை பாதுகாவலராக கொண்டு செயல்படலாயினர். அவருடைய உடலின் திருப்பண்டங்கள் இன்று சென்னை சாந்தோமிலுள்ள அவரின் கல்லறையில் வைக்கப்பட்டுள்ளது நாம் அறிந்ததே. இதே சென்னையில்தான் தூய தோமா அவர்கள் தன்னுடைய இறுதி நாட்களை கழித்தார், பணியாற்றினார், மனமாற்றத்தை ஏற்படுத்தினார் மற்றும் அவர் போதித்தவைகளுக்கு சாட்சியாக தன்னுடைய இரத்தத்தை சிந்தினார்.

சென்னை சலேசிய மாநிலத்திற்கு தூய தோமா பாதுகாவலராக கிடைத்தது மாபெரும் தனிச்சிறப்பாகும். இயேசுவின் சீடர்களில் இல்லாத ஒரு சிறப்பு இவருக்கு உண்டென்றால் அது இயேசுவின் நற்செய்தியோடும், நற்செய்திக்காகவும், அவர் பண்டைய ரோமானிய பேரரசின் எல்லைப்புறங்களை துணிச்சலோடும் சவாலோடும் கடந்தது. விவிலியத்தில் அவரது பெயர் மத்தேயு (10:3), மாற்கு (3:18), லூக்கா (6) மற்றும் தி.ப. (1:13)ல் காணப்பட்டாலும், யோவான் நற்செய்தியில் மட்டும்தான் தூய தோமாவின் தனிப்பட்ட சிறப்பான பணி மற்றும் அவரது குணாதிசயங்களை நம்மால் காணமுடியும்.

**தூய தோமா - மறைமுகத்தன்மையின் அமைதி:** இவரது பிறப்பையோ, இளமைப் பருவத்தையோ குறித்து விவிலியத்தில் எந்தத் தகவல்களையும் காண முடிவதில்லை. மாறாக, திருத்தூதர்களின் முதல் எழுவரின் பெயர்களும் தங்கள் அழைப்பிற்கு முன்பே குறிப்பிடப்பட்டிருப்பினும், தூய தோமாவின் பெயர் முதலில் குறிப்பிடப்படுவது திருத்தூதர்களின் பெயர் பட்டியலில்தான்.

**அடைமொழிகள் இல்லாத தூய தோமா :** திருத்தூதர்களில் அடைமொழி இல்லாமல் குறிப்பிடப்படுபவர் தூய தோமா. உதாரணத்திற்கு: பேதுரு தலைமையில் முதல்வர் எனவும், யோவான் அன்பில் முதல்வர் எனவும், சொல்லப்பட்டுள்ளது. ஏன் யூதா இஸ்காரியோத்திற்கு கூட நிதியமைச்சர் என்ற பட்டம் சூட்டப்படுகிறது. ஆனால் "திதிம்" என்ற சொல்லால் இவரை குறிப்பிடுகிறார்கள். அதாவது திதிம் என்றால் "இரட்டையர்" என்று பொருள். விவிலியத்தில் இந்த இரட்டையர் யார் என்றும் குறிப்பிடப்படவில்லை. அதுமட்டுமல்ல தூய தோமாவின் நற்செய்தி நூல் கூட திருஅவையால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு நற்செய்தி நூல் என்பது குறிப்பிடத்தக்கது. பதவி, பட்டம், அடைமொழி இவைகளை விரும்பித் தேடும் இன்றைய உலகில், நம் பாதுகாவலரின் மறைமுகத் தன்மை நம் குறுகிய அடையாளங்களைத் தாண்டி பயணிக்க நம்மை அழைக்கின்றது.

**சாட்சிய வாழ்வின் சின்னம் - தூய தோமா :** தூய யாக்கோபும் யோவானும் இயேசுவின் அரியணையின் இடது, வலது பக்க இடங்களுக்கு ஆசைப்பட்டனர். பேதுரு கூட தனது சீடத்துவத் தியாகத்திற்கு பதிலாக என்ன கிடைக்கும் என்று இயேசுவிடம் கேட்டார் ஆனால் தூய தோமா எதையும் எதிர்ப்பார்க்காதவராக இருந்தவர். இயேசுவிற்கு தன் உயிரை வழங்க கூட தயங்காத தியாகத்தன்மை தோமாவில் வெளிப்படுகிறதை நாம் பார்க்கலாம்.

**மறைப்பணியில் - தூய தோமா :** கேரளத்திற்கும் தமிழகத்திற்கு வருகைத் தந்ததையும் கி.பி. 52ல் ஏழு ஆலயங்களைக் கட்டி எழுப்பி, சென்னையில் மறைச்சாட்சியாக உயிர்த் தியாகம் செய்து சாந்தோமில் அடக்கம் செய்யப்பட்டிருப்பதையும், பல நம்பிக்கைக்குரிய மரபுகளிலும், வரலாற்று சாட்சியங்களிலும் புலப்பட்டாலும், அவரின் மறைப்பணியின் முக்கிய விவரங்கள் வரலாற்றின் திரைக்கு பின் மறைந்திருக்கின்றன என்பதே உண்மை. தூய பேதுருவும், பவுலும், யாக்கோபும் ஆற்றிய மறைப்பணிக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவமும் சிறப்பும் தூ ய தோமாவின் மறைப்பணிக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும், வரலாற்றின் மௌனத்தில் அவரது பிள்ளைகளாகிய நாம் அவரது மறைப்பணியை நம் வாழ்வில் எண்பித்துக் காட்டவேண்டும்.

**உலகிற்கு உப்பாக - தூய தோமா :** உலகிற்கு உப்பாக மாற அழைக்கப்படும் நாம் தூய தோமாவின் முன்மாதிரிகையை பின்பற்றி வாழ முற்படுவோம். நம் அன்றாட குடும்ப மற்றும் பங்கு வாழ்வின் மறைமுகத் தன்மையில் நற்செய்தியின் சாட்சிய மக்களாக வாழ்வோம்.

**இறுதியாக :** "நான் நம்புகிறேன். என் நம்பிக்கையின்மை நீங்க உதவும்" (மாற்கு 9:24) என்று இயேசுவிடம் கூறிய பெயர் தெரியாத கதாபாத்திரத்தைப் போல இறைவனில் நாம் கொண்டுள்ள அனுபவத்தை உறுதிப்படுத்திக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம்.

## மரியாளின் வாழ்வில் தூய சுவக்கீன் - அன்னம்மாள்

திரு. புல்லோன் ஜோ. லூயிஸ்

கடவுள் தனது மீட்பின் திட்டத்தில் பலரை மீட்பின் பங்காளிகளாக, உடன் உழைப்பாளர்களாக தேர்ந்தெடுத்தார். அப்படி தேர்ந்துக் கொண்டவர்களை அவர்கள் தாயின் கருவிலேயே அர்ச்சித்து இறையழைப்பைக் கொடுத்தார். இறையழைப்பு இறைவனே விரும்பி கொடுக்கும் ஓர் அழைப்பு. "தாயின் வயிற்றில் நான் உன்னை உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன், மக்களினங்களுக்கு உன்னை இறைவாக்கினராகத் தேர்ந்துக் கொண்டேன்" (எரே:1:5). "நீங்கள் என்னை தேர்ந்துகொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்துக் கொண்டேன்" (யோவான் 15:16). என்று சொல்லி தமக்குரியவர்களை கடவுள் தேர்ந்துக் கொண்டார். அவர்களின் பிறப்பு அதிசயத்தக்க, ஆச்சரியமான அடையாளங்களைக் கொண்டது. உலக, சரீர நியதியின்படி குழந்தைச் செல்வம் கிடையாது என்றாகிவிட்ட வயதான காலத்தில் வயது முதிர்ந்த ஆபிரகாமுக்கும், கற்பம் தரிப்பதற்கான சாத்தியமே இல்லாத நிலையில் இருந்த சாராவுக்கும் உடன்படிக்கையின் மைந்தர் பிறந்தது கடவுளின் அருளால் தானே (தொ.நூ. 21: 1-5). மனோவாகு மனைவி மலடியாய் இருந்தபோதுதான் கடவுளின் அருள்வாக்கு பெற்று இறைவல்லமையை வெளிப்படுத்தும் விதமாக சாம்சன் பிறந்தார். (நீத.13: 2-3).

செக்கரியாவின் மனைவி எலிசபெத் மிகவும் முதிர்ந்த வயதில் மலடியாய் இருந்தபோது, கடவுளின் அருள்வாக்கினால் இயேசுவின் முன்னோடி, இதோ "இறைவனின் செம்மறி" என இயேசுவை சுட்டிக்காட்டிய திருமுழுக்கு யோவானை பெற்றெடுத்தார். (லூக். 1: 3-16). இவர்கள் பிறப்புகள் எல்லாவற்றையும் மிஞ்சும் விதமாக சுவக்கீன் அன்னம்மாள் தம்பதியர்களின் முதிர்ந்த வயதில் குழந்தை இல்லா குறையை நீக்க செல்வமாக, அருமை மகளாக அன்னை மரியை கடவுள் பிறக்கச் செய்தார். சுவக்கீன் - அன்னம்மாள், யார் இவர்கள்? கலிலேயாவின் நாசரேத்தூரில் இளமை முதலே தாழ்ச்சியிலும், பக்தியிலும், கற்பிலும், இறையன்பிலும், பிறரன்பிலும் சிறந்தவர்களாக வாழ்ந்து வந்தவர்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமையவேண்டி அனுதினமும் இடைவிடாது நம்பிக்கையோடு செபித்து வந்தவர்கள். இறைவன் அவ்விருவரையும் அன்பில் இணைத்தார், அருளில் நிறைத்தார். மணவாழ்வில் இணைந்து இறைத் தொண்டில் ஈடுபட்டுவந்த இத்தம்பதியருக்கு முதிர்ந்த வயது வரைக்கும் குழந்தைப்பேறு இல்லாது வருந்தினர். இறைவன் நமக்கு குழந்தைச் செல்வத்தை தரசித்தமானால் அக்குழந்தையை இறைவனில் தேவாலய பணிக்கு அர்ப்பணிப்பதாக வேண்டிக்கொண்டனர். ஏனெனில் யூத மரபுபடி குழந்தைபேறு இல்லாதவர்கள் சபிக்கப்பட்டவர்களாகவும், மெசியா வழங்கும் நலனில் பங்குப் பெற தகுதியற்றவர்களாகவும் கருதப்பட்டனர். எனவே இத்தம்பதியினரின் உறவினர்கள் மற்றும் ஊர்மக்களின் விமர்சனத்திற்கு ஆளானார்கள்.

இத்தகைய தருணத்தில், இறைவிசுவாசத்தில் தங்களை தளராது இணைத்துக் கொண்ட அந்த தெய்வீகத் தம்பதியரின் வேண்டுதலுக்கு இறைவன் செவிசாய்த்தார், மனமிரங்கினார். அவர்களை அருளால் நிறைத்து குழந்தை பேற்றை கொடுத்தார். அன்னை அற்புதக் குழந்தையாக பிறந்தார். அந்த அற்புதக் குழந்தைதான் அன்னைமரியா. அன்னா இறைவனுக்கு கொடுத்த வாக்குறுதியின்படி மூன்று வயதில் மரியா கோவிலுக்கு கொண்டுவரப்பட்டு ஆண்டவரின் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டார். சாலமோன் காலத்திலிருந்தே "கன்னியர்" கோவிலில் வளர்க்கப்பட்டு, வயது வந்தபோது திருமணம் செய்து வைக்கப்படுவது வழக்கமாயிருந்தது.

ஆம். சுவக்கீன் அன்னம்மாள் புண்ணிய தம்பதியினர் இறைச் சித்தத்தின்படி வாழ்ந்ததால் தான், கடவுள் அவர்களை தேர்ந்துகொண்டு, அவர்களின் மூலம் தம் மகனின் தாயை - மரியாவை பிறக்கச் செய்தார். மரியாவும் தம் பெற்றோரின் வாழ்வுதான் தனக்கு மாதிரி, அடிப்படை ஆதாரம் என ஏற்று இறை குணங்களாம் அன்பு, இரக்கம், பரிவு, கனிவு, தாழ்ச்சி, விட்டுக் கொடுக்கும் மனம், தாராளகுணம், மன்னிக்கும் மனம் என்ற அனைத்தையும் அவர்களிடமிருந்து தெரிந்துகொண்டு, புரிந்துகொண்டு, கற்றுக் கொண்டு வாழ ஆரம்பித்தார். பொறுப்புடன் கூடிய நல்வாழ்வு வாழ முயற்சி செய்தார். இறையருளை அதிகமாய் பெற்றுக் கொண்டார். இருப்பவர்க்கு இன்னும் அதிகமாய் கொடுக்கப்படும் என்ற இறைவாக்கு அன்னை மரியா வாழ்வில் நிறைவேறியது.

மூன்றரை வயதில் தந்தை சுவக்கீன் அவர்களையும், 12 வயதில் தாய் அன்னம்மாள் அவர்களையும் இழந்து சொல்லொண்ணா வேதனையை மரியா அடைந்தார். அந்த சூழலிலும் "கற்பு என்ற லீலி மலரை காப்பாற்றுவதைவிட தனக்கு இன்பமென்பது ஒன்றும் இல்லை" என்று தூய வாழ்வு வாழ்ந்து வந்தார். பூப்பெய்திய மரியாவுக்கு மனம் முடிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு, யோசேப்பை துணையாக்க சக்கரியா முடிவு செய்தார். திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டபோது மரியாவுக்கு வயது 14. இதோ கடவுள் கபிரியேல் வானத்தூதரை அனுப்பி "அருள் நிறைந்தவரே வாழ்க" என்று வாழ்த்தினார். "இதோ ஆண்டவரின் அடிமை" என்று அர்ப்பணம் செய்தார். உலக வரலாற்றை மாற்றியமைத்த உன்னதமான உரையாடல், இதனால் ஒரு கன்னிப்பெண் உன்னதரின் வல்லமையால் உத்தமரின் தாயாகிறாள். ஆம்.. மாசற்ற, பாவமில்லா வாழ்வை உறுதிப்படுத்துகிறார்.

மரியா - யோசேப்பு திருமண உறவு அருளுறவாக அமைந்திருக்கிறது. தான் அறியாமலேயே தனக்கு மணஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிற மரியா கருவுற்றிருப்பதை அறிந்த யோசேப்பு அச்சிக்கலான தருணத்தை மிகவும் நேர்த்தியாக கையாளுவதில் காட்டும் பெருந்தன்மை அவரின் அன்பின் உயர்விற்கு, நம்பிக்கைக்கு அருமையான சான்று. அதுப் போன்றே "மகனே ஏன் இப்படி செய்தாய்? இதோ பார் உன் தந்தையும் நானும் மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே" (லூக். 2:48) என காணாமல்

போன தன் மகனைக் கோயிலில் கண்டபோது கூறியதில், மரியா அவர் தம் கணவர் யோசேப்பு அவர்களை முன்நிலைப்படுத்துவது நமக்குத் தெளிவாகிறது. மரியாவிடம் துலங்கிய இந்த பிறரை முன்னிலைப்படுத்தும் பண்பு, சிக்கலான சூழ்நிலையில் யோசேப்பிடம் காணப்பட்ட பெருந்தன்மை என்பன அவர்களின் ஒருமித்த மணவாழ்விற்கான எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. இவ்வாழ்வானது சுவக்கீன் அன்னம்மாள் அவர்களின் வாழ்வை பிரதிபலிக்கிறது.

அதுபோலவே, தன் மகன் இயேசுவுக்கு நல்லன்னையாக இருந்தார். இயேசுவை பெற்றதோடு நின்றுவிடாமல் பேணி வளர்த்தார். ஆபத்து வந்தபோது எகிப்து நாட்டிற்கு ஓடிச் சென்று அகதியாக வாழ்ந்தார்.கோயிலில் அறிஞர்களே மலைத்துப் போகும் அளவிற்கு தன் மகனை ஞானத்தில் வளர்த்தார். அனைத்திலும் மேலாய்,இறையரசு பற்றிய உயரிய சிந்தனைகளை உள்ளத்தில் விதைத்தார். கானாவூர் திருமண விருந்தின்போது, மகனின் தயக்கத்தை களைந்து, தைரியத்தை ஊட்டி அவரது உன்னத பணியினை தொடங்கி வைத்தார். இயேசுவை தன் மகனாக கருதாமல் இறைமகனாகவே வளர்த்தெடுத்தார்.

அன்னை மரியா பொதுவாழ்வில் சிறந்து விளங்கினார். அடுத்தவர் நலனில் அக்கறைக் கொண்டு செயல்படும் பண்புடையவள் மரியா. எலிசபெத்துக்கு உதவிட விரைந்து சென்றதிலிருந்தும் கானாவூர் திருமணத்தில் ஏற்பட்ட குறைநீக்க தாமே முயற்சி எடுத்ததிலிருந்தும் நமக்கு அது மிகமிகத் தெளிவாகிறது. சுவக்கீன் அன்னம்மாள் வாழ்விலும் யோசேப்பு மரியா வாழ்விலும் ஒருசில ஒப்புமைகளை காணமுடிகிறது. குழந்தைப் பேறு இல்லா மலடி அன்னம்மாளும், கன்னியாயிருக்கும் போதே குழந்தைப்பேறு பெற்ற மரியாளும் - இருவருமே சமூகத்தின் விமர்சனங்களுக்கு உள்ளானார்கள். இறைவனின் விருப்பப்படி சுவக்கீன் அன்னம்மாள் குழந்தைக்கு "மரியாள்" என பெயரிட்டனர். இறைவனின் விருப்பப்படி யோசேப்பும் மரியாவும் தான் பெற்ற மகனுக்கு இயேசு என பெயரிட்டனர். அன்னம்மாள் தான் வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப தன் மகள் மரியாவை தேவாலய பணிகளுக்கு அர்ப்பணித்தார். அன்னைமரியாவும் தன் மகனை மனுக்குல மீட்புக்காக அர்ப்பணித்தார். 12 வயது ஆனபோது மரியா தன் தாயை இழந்தவராய் தவித்து பெறும் வேதனை அடைந்தார். இதோ இயேசுவுக்கு 12 வயதானபோது தன் மகனை காணாததால் பெரும் வேதனை அடைந்தார்.

இப்படி மரியாவின் வாழ்வு அன்னம்மாளின் வாழ்வைப் போன்றே அருள் நிரம்பப் பெற்ற வாழ்வாக இருந்தது. ஆம் மரியா தூய வாழ்வு வாழ்ந்து தன்னையே முழுமையாக கடவுளுக்கு ஒப்புக் கொடுத்து இறைவன் தம் விருப்பப்படி தன்னை ஓர் கருவியாக பயன்படுத்திக் கொள்ள முழு சம்மதமும் ஒத்துழைப்பும் கொடுத்ததனால்தான், அந்த தியாக வாழ்விற்கு பரிசாக ஆண்டவர் அவருடன் தங்கி வாழ்ந்தார்.

மரியாள் ஆண்டவருடன் வாழ்ந்த வாழ்வு நிரந்தரமான, உறுதியான, நிச்சயமான வாழ்வு. மரியாவை ஆண்டவர் தேர்ந்துக் கொண்ட நாள் முதலாய் பரிசுத்த ஆவியாரை சீடர்கள் பெறும் நாள் வரையில், ஆண்டவரின் திட்டத்தோடு செயல்பட்டு அவரிலே, அவருக்காக, அவரோடு வாழ்ந்தார். "நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன் (யோவான் 14:18)." "இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன்" (மத்:28:20). என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்த மரியா ஆண்டவருடன் எந்நாளும் இணைந்து வாழ்ந்தார். மீட்பின் திட்டத்தில் பங்குகொண்டார். உடன் மீட்பரானார். மீட்பின் தாயாக, மீட்பரின் தாயாக, வாழ்வின் தாயாக, வாழ்விக்கும் தாயாக ஆனார். இறைவனுக்கும் மனிதருக்குமிடையே பரிந்துரைப்பாளரானார். இப்படி இறைவார்த்தையை வாழ்வாக்கிய மரியா இறையரசு வாழ்வை அனுபவித்தார்.

மரியாவின் வாழ்வு இறையரசுக்கேற்ற இறைவாழ்வு. இறைமகன் இயேசு இறையரசை அமைக்க அடித்தளமாகவும் முன்மாதிரியாகவும் இருந்தவர் நம் அன்னைமரியாஎன்பதுமிகவும் குறிப்பிடத்தக்கது. இன்று எல்லோரையும் கிறிஸ்துவிடம் கொண்டு சேர்க்கக் கூடியவராகவும் இருக்கின்றார். நாம் இன்று அந்த அன்னை வாழ்ந்ததுப்போல குடும்ப வாழ்வு, பொதுவாழ்வு, இறையரசு வாழ்வு வாழும் போது நாமும் இறையரசின் பிள்ளைகள். அப்போதுதான் நாம் நிச்சயமாக இறைமக்கள். நம் அன்னை தம் திருமகனிடம் ஒவ்வொரு நாளும் நமக்காக பாசத்தோடு பரிந்துபேசி நமக்கு எல்லா நலன்களையும் பெற்றுத் தருகிறார். அன்னையின் ஆசி நம்மோடு இருக்க அன்னையின் வாழ்வை ஓர் முன்னுதாரணமாக கொள்வோம்.

## தூய லொயோலா இஞ்ஞாசியார் - வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் சுரேஷ்

இவர் 26 வயதுவரை பெர்டினான்ட் இஸபெல்லாவினது அரசவையில் போர்வீரராகப் பணியாற்றியவர். ஆடம்பர வாழ்வும், அகங்கார தொனியும் இவரை ஆட்கொண்டிருந்தது. எப்போதும் வெற்றியை மட்டுமே தன் வாழ்வில் கண்டு மகிழ்ந்தவர். பிரெஞ்சு படையினர் 1521ம் ஆண்டு நடத்திய போரின்போது பல்வேறு மக்கள் எண்ணற்ற வகையில் கொலையுண்டார்கள். பலர் படுகாயமுற்றனர். அதில் இஞ்ஞாசியாரும் ஒருவர். படைவீரர் என்பதால் அவரை கோட்டையில் வைத்து மருத்துவர்கள் கவனித்து வந்தார்கள். அப்போது தனிமையில் இருந்த இஞ்ஞாசியாருக்கு பொழுதுபோக்கிற்காக கொடுக்கப்பட்ட பல்வேறு நூல்களில் தூய பிரான்சிஸ் அசிசியார், தூய சாமிநாதர், லுடோல்ப் எழுதிய கிறிஸ்துவின் வரலாறு எழுதிய புனிதர்களின் வரலாறு ஆகிய நூல்களும் இருந்தன. ஒருபுறம் அவரின் தனிமை தொலைந்தது என்றாலும் மனக்கலக்கம் தொடங்கியது. கிறிஸ்துவின் வரலாறு என்ற புத்தகம் அவர் மனதை தின்றது. தான் இனி கிறிஸ்துவுக்கான போர் வீரராக வாழ வேண்டும் என்ற உந்துதல் பிறந்தது. அன்றிரவு அன்னை மரியா கையில்

பாலன் இயேசுவோடு இஞ்ஞாசியாருக்கு காட்சி கொடுத்து அவரின் தேவ அழைத்தலை அவருக்கு உறுதிப்படுத்தினார். பின்னாளில் மொன்செராத் சென்று ஒப்புரவு பெற்று மனம் இலகுவானார். படைவீரருக்குரிய ஆயுதங்களை பீடத்தில் வைத்துவிட்டு இரவு முழுதும் செபித்தார். பிறகு தான் விரும்பியபடி பாரீஸ் சென்று தத்துவயியல் மற்றும் இறையியலில் பட்டம் பெற்றார். 1534ல் புதிய துறவு அமைப்பை உருவாக்கினர் இவ்வாறு இயேசு சபை உலகிற்குள் உதயமானது.

இந்த அமைப்பிற்கு திருத்தந்தை மூன்றாம் பவுல் 1540 செப்டம்பர் 27ம் நாள் அன்று அனுமதி அளித்தார். 1556, ஜூலை 31 அன்று இறந்த இஞ்ஞாசியாரை திருத்தந்தை ஐந்தாம் பவுல் 1609ம் ஆண்டு ஜூலை 27ம் நாள் அருளாளராக உயர்த்தினார். திருத்தந்தை 15ம் கிரகோரி 1622 மார்ச் 12 அன்று இஞ்ஞாசியாரை புனிதராக உயர்த்தினார். நற்கருணை, திருச்சிலுவை ஆகியவற்றின்மீது அசையா பற்றுக்கொண்டிருந்த தூய இஞ்ஞாசியாரை பின்பற்றும் இயேசு சபையாரும் அதை தொடர்ந்தனர். காயங்கள் நம் வாழ்வின் வழியை நமக்குக் காட்டும் கண்ணாடிகள் என்பதை உணர்ந்தால் எல்லா காயங்களும் நமக்கு ஆசான்களே என்பதை உணர்ந்து இன்று புனிதராக உயர்ந்த இஞ்ஞாசியாரைப்போல் நாமும் நம் வாழ்வில் ஏற்படும் காயங்களை மனதார ஏற்று அதிலிருந்து வெற்றிக் கண்டு இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வோம்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச

### பொறாமை, தவறான குற்றச்சாட்டுகளுக்கு இட்டுச்செல்கின்றது

பிறரின் நன்மைத்தனம் பற்றி பொறாமை கொள்வது, தவறானக் குற்றச்சாட்டுகளுக்கு வழியமைக்கும் மற்றும், அந்த மனிதரின் நல்ல பெயரைக் கெடுக்கும் நோக்கம் கொண்டது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஞாயிறு மூவேளை செப உரையில் கூறினார். இஞ்ஞாயிறு நண்பகலில் வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த இருபதாயிரத்திற்கு மேற்பட்ட திருப்பயணிகள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு, இஞ்ஞாயிறு நற்செய்தியை மையப்படுத்தி மூவேளை செப உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒருவரின் நன்மைத் தனம் மற்றும் அவரின் நற்பணிகள்மீது பொறாமைப்படுவது, தவறான குற்றச்சாட்டுக்களுக்கு இட்டுச்செல்லும் என்று கூறினார்.

### ஏழைகள், சுற்றுச்சூழல் பராமரிப்பு உலகின் இருபெரும் தேவைகள்

படைத்தவராம் இறைவனிடமிருந்து நாம் பெற்றுள்ள தோட்டமாகிய இப்பூமியை, வருங்காலத் தலைமுறைகளுக்கு, பொட்டல் காடாக வழங்காதிருப்பதற்குத் துரிதமாகச் செயல்பட வேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார். ஏழைகளையும், சுற்றுச்சூழலையும் பராமரிக்க வேண்டியது, இன்றைய உலகின் இருபெரும் தேவைகளாக உள்ளன என்றுரைத்த திருத்தந்தை, உலகளவில்,

மின்சக்தி பரிமாற்றத்திற்குப் பொறுப்பானவர்கள், இந்த உலகின் அனைத்து மக்களையும், வருங்காலத் தலைமுறைகளையும், அனைத்து உயிரினங்களையும் சுற்றுச்சூழல் அமைப்பையும் கருத்தில் கொண்டு செயல்படுமாறு கேட்டுக்கொண்டார்.

**அருள்பணியாளர்ளுக்கு ஆதரவையும் பாசத்தையும் காட்டுவோம்**

இயேசுவின் திரு இதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள சூன் மாதத்தில், அத்திரு இருதயத்திடம் நாம் செபிக்குமாறும், அருள்பணியாளர்களுக்கு ஆதரவையும் பாசத்தையும் காட்டுமாறும், அனைவருக்கும் அழைப்பு விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில், இப்புதன்கிழமை காலை பத்து மணியளவில் பொதுமறைகல்வியுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவ்வுரையின் இறுதியில் அனைவரையும் வாழ்த்துகையில், அருள்பணியாளர்களுக்கு அன்பையும், பாசத்தையும் வழங்குவதன் வழியாக, இரக்கம் நிறை அன்பே உருவான இயேசுவின் திருஇருதயத்தின் சாயலாக அவர்கள் விளங்குவதற்கு உதவ முடியும் என்று கூறினார்.

**அக்டோபர் 14, ஆஸ்கர் ரொமேரோ உட்பட 6 புதிய புனிதர்கள்**

அருளாளர்கள் திருத்தந்தை ஆறாம் பவுல், ஆஸ்கர் ரொமேரோ, பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி, வின்சென்சோ ரொமானோ, மரிய கத்தரீனா காஸ்பர, இயேசுவின் தெரசின் நசரியா இஞ்ஞாசியார் ஆகிய ஆறு பேரையும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வருகிற அக்டோபர் 14ம் தேதி புனிதர்கள் என அறிவிப்பார். மறைசாட்சியான சான் சால்வதோர் பேராயர் ஆஸ்கார் ரொமேரோ அவர்கள், 1980ம் ஆண்டு மார்ச் 24ம் தேதி, திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார். இவர், மத்திய அமெரிக்க நாடான எல் சால்வதோர் நாட்டின் Ciudad Bariosல், 1917ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் பிறந்தார். மறைமாவட்ட அருள்பணியாளரான, அருளாளர் பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி அவர்கள், திருநற்கருணை ஆராதனை அருள்சகோதரிகள் சபையை நிறுவியவர். அருளாளர் வின்சென்சோ ரொமானோ (1751-1831) அவர்கள், இத்தாலியின் நேப்பிள்ஸ் பகுதியைச் சார்ந்த மறைமாவட்ட அருள்பணியாளர். அருளாளர் மரிய கத்தரீனா காஸ்பர் அவர்கள், இயேசு கிறிஸ்துவின் ஏழைச் சகோதரிகள் சபையை நிறுவியவர். அருளாளர் இயேசுவின் தெரசின் நசரியா இஞ்ஞாசியார் அவர்கள் திருஅவையின் திருச்சிலுவை மறைபோதக சபையைத் தோற்றுவித்தவர்.

**நற்செய்தி அறிவிப்பில் முக்கியமான நாயகர் தூய ஆவியார்**

அறிவிப்பு, சேவை, கைம்மாறு கருதாமை ஆகிய மூன்றும், நற்செய்தி அறிவிப்பிற்கு மூன்று அடிப்படை கூறுகள் என, திருத்தூதர் பர்னபா விழாவில் மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ். நற்செய்தி அறிவிப்பு, ஏனைய சமூகத்தொடர்புகள் போல் இல்லையெனவும், தூய

ஆவியாரின் செயலால், அந்த அறிவிப்பு, இதயங்களை மாற்றும் சக்தியைக் கொண்டுள்ளது என்றும் மறையுரையில் கூறியத் திருத்தந்தை, மேய்ப்புப்பணி திட்டங்கள் நிறைவானவையாகத் தெரிந்தாலும், அவை இதயங்களை மாற்றுவதற்குத் திறனற்றவை. ஏனெனில் அவற்றின் முடிவு அவற்றிலே உள்ளன. அவை நற்செய்தி அறிவிப்பின் கருவிகள் இல்லையென்றும் கூறினார். இலாபம் கிடைக்கும் என்ற வர்த்தக எண்ணத்தோடு, இயேசு நற்செய்தி அறிவிக்க நம்மை அனுப்பவில்லை. மாறாக, தூய ஆவியாரோடு அனுப்புகிறார் என்றும், நற்செய்தி அறிவிப்புக்குப் பக்கபலமாக இருப்பது மனித சக்தியல்ல, ஆனால் அப்பணியில் முன்னோக்கிச் செல்ல, தூய ஆவியாரே நமக்குத் துணிச்சலை அளிக்கிறார் என்றும் கூறினார் திருத்தந்தை. நற்செய்தி அறிவிப்பின் இரண்டாவது கூறு, சேவை மனப்பான்மை என்றுரைத்த திருத்தந்தை, நாம் பல நல்ல காரியங்களைச் சொல்லலாம், ஆனால் சேவையின்றி செய்யப்படுவது நற்செய்தி அறிவிப்பு இல்லை எனவும் கூறினார். நற்செய்தி அறிவிப்பின் மூன்றாவது கூறு, கைம்மாறு கருதாத பண்பு என்றும், நற்செய்தி இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டியது என்றும், தனது சொந்தத் திறமையால் எவரும் மீட்கப்பட முடியாது என்றும் உரைத்த திருத்தந்தை நாம் எல்லாரும் இயேசு கிறிஸ்துவால் இலவசமாக மீட்கப்பட்டுள்ளோம், அதனால் நாமும் இலவசமாக அதை அளிக்க வேண்டும். நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்கள், இதனைத் தெரிந்திருக்க வேண்டும் என்று கூறினார்.

**உரிமைக்காகப் போராடும் அருள்பணியாளர்க்கு விருது**

இலங்கையில், பாலியல் வன்கொடுமைகள் மற்றும், சித்ரவதைகளுக்குப் பலியானவர்களுக்கும், அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கும் ஆதரவாகப் பணியாற்றும் அருள்பணி Nandana Manatunga அவர்களுக்கு 2018ம் ஆண்டின் Gwangiu மனித உரிமைகள் விருது வழங்கப்பட்டுள்ளது. தென் கொரியாவில் Gwangiu நகரில் 1980ம் ஆண்டில் இடம்பெற்ற பொது மக்கள் எழுச்சியில் பெருமளவான மக்கள் கொல்லப்பட்ட நாளுக்கு, அடுத்த நாளில், Gwangiu மனித உரிமைகள் மையம் ஆரம்பிக்கப்பட்டது. அருள்பணி Manatunga அவர்கள் ஆற்றிவரும் மனிதாபிமானப் பணிகள், உலகஅளவில் பெருமளவாகப் பரவியுள்ளதையடுத்து, இந்த விருது வழங்கப்படுவதாக அந்த மையம் அறிவித்துள்ளது. அருள்பணி Manatunga அவர்கள், பல வகைகளில் உரிமைகள் மீறப்பட்டவர்களைத் தன் குடும்ப உறுப்பினர்கள் போன்று, பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், தன் மையத்தில் வைத்து உதவி வருகிறார் என மனித உரிமைகள் அலுவலகத்தின் Lucille Abeykoon கூறினார். இலங்கையில், 1987 முதல் 1989ம் ஆண்டுவரை இடம்பெற்ற இளையோர் எழுச்சியின் போது, காணாமல் போன இளையோரின் குடும்பங்களுக்கு சிறப்பாக உதவி வருகிறார், அருள்பணி Manatunga.

## சுடர் வாசகர் போட்டி - 48 சரியான விடைகள்

1. நம்மைத் தயாரிக்க வேண்டும்
2. பிரீஸ்லாந்து
3. திருத்தந்தை பிரான்சிஸ்
4. கி.பி.185ல்
5. தூய பர்னபா
6. தியாகத்தின்
7. தூய அந்தோணியார்
8. வாக்குத்தத்தத்தின் பேழை
9. நம்மீதுள்ள
10. பூத்து குலுங்கி கனிகொடுக்கும் மரமாக
11. மலாக்.3:1-5
12. வாழ்வின் மையமாகவும், ஊற்றாகவும் இருக்கின்றன
13. 13 புதுமைகள்.
14. ஜோசப் செகி மற்றும் 4 நண்பர்கள்
15. 1860

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. S. குழந்தை மேரி, பெரவளூர்
2. C. துரைராஜ், சிவகாசி
3. C. ஜெயந்தி பெர்னான்டஸ், சென்னை

## சுடர் வாசகர் போட்டி - 49

1. "நான் மன்னித்து விட்டேன் அவரை" என்று தூய மரிய கொரற்றி யாரைக் குறிப்பிடுகின்றார்?
2. "நான் என் வலுவின்மையில்தான் மனமுவந்து பெருமைப் பாராட்டுவேன்" கூறியது யார்?
3. தனது இறப்பை 6 நாட்களுக்கு முன்னரே அறிவித்த தூயவர் யார்?
4. தூய யாக்கோபுவின் பெற்றோர் யார்?
5. தாத்தா பாட்டிகளின் பாதுகாவலர் யார்?
6. இயேசு சபையை உருவாக்கியவர் யார்?
7. அக்டோபர் மாதம் அறிவிக்க இருக்கும் 6 புனிதர்கள் யாவர்?
8. இந்தியாவிற்கு இயேசுவின் நற்செய்தியை முதன்முதலில் கொண்டுவந்த திருத்தூதர் யார்?
9. "சகாய அன்னையின் கோட்டை" என்ற பெயரில் உதவி செய்த அருளாளர் யார்?
10. திருவழிபாட்டு முறைக்கு அடித்தளமிட்டவர் யார்?
11. கார்மேல் அன்னை தூய சைமன் ஸ்டோக்குக்கு கனவில் தோன்றி கொடுத்த பொருள் என்ன?
12. திருப்பயணங்களின் பாதுகாவலர் யார்?
13. அடுப்புத் தீயில் தன் கால்களை கருக்கிக் கொண்ட தூயவர் யார்?
14. திதிம் என்பது யாருடைய பெயர்?
15. "சேவை இன்றி செய்யப்படுவது நற்செய்தி அறிவிப்பு இல்லை" கூறியது யார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

01.8.2018 தூய அல்போன்சு மரிய லிகோரியார்
02.8.2018 அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி
04.8.2018 தூய ஜான்மரி வியான்னி
05.8.2018 ஆண்டின் பொதுக்காலம் 18ம் ஞாயிறு
06.8.2018 ஆண்டவரின் தோற்றம் மாற்றம் விழா
12.8.2018 ஆண்டின் பொதுக்காலம் 19ம் ஞாயிறு
15.8.2018 தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா/ இந்திய சுதந்திர நாள்
19.8.2018 ஆண்டின் பொதுக்காலம் 20ம் ஞாயிறு
22.8.2018 அரசியான தூய கன்னிமரியா
24.8.2018 புனித பர்த்தலமேயு, திருத்தூதர் திருவிழா
25.8.2018 அருளாளர் மரிய ட்ரொங்காட்டி
26.8.2018 அருளாளர் செப்ரீனா நமுங்கரா
ஆண்டின் பொதுக்காலம் 21ம் ஞாயிறு
28.8.2018 புனித அகுஸ்தீன் ஆயர்

### பகுதி 2: விசுவாசத்தில் வாழ...

மரியாளின் விண்ணேற்பும், விடுதலையும்
அருளாளர் செப்ரீனா நமுங்கரா - வாழ்வு தரும் பாடம்
தூய மோனிக்கா தந்த தூய அகுஸ்தினார்
திருச்சபை செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூலை 20ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஜூலை மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 13ம் ஞாயிறு | I. சா.ஞா. 1: 13-15,2:23-24<br>II. 2கொரி. 8: 7,9, 13-15 | மாற்கு 5: 21-43 |
| 2 | தி | | ஆமோ. 2: 6-10,13-16 | மத். 8: 18-22 |
| 3 | செ | தூய தோமையார், இந்தியாவின் அப்போஸ்தலர் பெருவிழா | எபேசி. 2: 19-22 | யோவா. 20: 24-29 |
| 4 | பு | போர்த்துக்கல் நாட்டு தூய எலிசபெத்தம்மாள் | ஆமோ. 5: 14-15,21-24 | மத். 8: 28-34 |
| 5 | வி | தூய அந்தோணி மரிய செக்கரியா | ஆமோ. 7:10-17 | மத். 9: 1-8 |
| 6 | வெ | தூய மரிய கொரற்றி | ஆமோ. 8: 4-6, 9-12 | மத். 9: 9-13 |
| 7 | ச | | ஆமோ. 9: 11-15 | மத். 9: 14-17 |
| 8 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 14ம் ஞாயிறு | I. எசே. 2: 2-5<br>II. 2கொரி. 12: 7-10 | மாற்கு 6: 1-6 |
| 9 | தி | | ஓசே. 2: 14-16, 19-20 | மத். 9: 18-26 |
| 10 | செ | | ஓசே. 8: 4-7,11-13 | மத். 9: 32-38 |
| 11 | பு | தூய பெனடிக்ட் | ஓசே. 10: 1-3,7-8,12 | மத். 10: 1-7 |
| 12 | வி | | ஓசே. 11: 1-4,8-9 | மத். 10: 7-15 |
| 13 | வெ | தூய ஹென்றி | ஓசே. 14: 1-9 | மத். 10: 16-23 |
| 14 | ச | தூய கமில்லஸ் தெ லெல்லிஸ் | ஓசே. 6: 1-8 | மத். 10: 24-33 |
| 15 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 15ம் ஞாயிறு | I. ஆமோ. 7: 12-15<br>II. எபே. 1: 3-14 | மாற்கு 6: 7-13 |
| 16 | தி | தூய கார்மேல் அன்னை | எசா. 1: 11-17 | மத். 10: 34-11:1 |
| 17 | செ | | எசா. 7: 1-9 | மத். 11: 20-24 |
| 18 | பு | | எசா. 10: 5-7, 13-16 | மத். 11: 25-27 |
| 19 | வி | | எசா. 26: 7-9,12,16-19 | மத். 11: 28-30 |
| 20 | வெ | தூய அப்பொலினாரிஸ் ஆயர் | எசா. 38: 1-6,21-22,7-8 | மத். 12: 1-8 |
| 21 | ச | பிரிந்தீசி புனித லாரன்ஸ் | மீக். 2: 1-5 | மத். 12: 14-21 |
| 22 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 16ம் ஞாயிறு | I. எரே. 23: 1-6<br>II. எபே. 2: 13-18 | மாற்கு 6: 30-34 |
| 23 | தி | ஸ்வீடன் நாட்டு பிரிஜித் | மீக். 6: 1-4, 6-8 | மத். 12: 38-42 |
| 24 | செ | தூய ஷார்பல் மாக்ல.்ப் | மீக். 7:14-15,18-20 | மத். 12: 46-50 |
| 25 | பு | தூய யாக்கோபு திருத்தூதர் விழா | 2கொரி. 4: 7-15 | மத். 20: 20-28 |
| 26 | வி | தூய சுவக்கின் அன்னம்மாள் | எரே. 2: 1-3,7-8,12-13 | மத். 13: 10-17 |
| 27 | வெ | | எரே. 3: 14-17 | மத். 13: 18-23 |
| 28 | ச | தூய அல்போன்சா | எரே. 7: 1-111 | மத். 13: 24-30 |
| 29 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 17ம் ஞாயிறு | I. 2அர. 4: 42-44<br>II. எபே. 4: 1-6 | யோவா. 6: 1-5 |
| 30 | தி | தூய பீட்டர் கிறிசோலோகா ஆயர் | எரே. 13: 1-11 | மத். 13: 31-35 |
| 31 | செ | தூய இஞ்ஞாசியார் | எரே. 14: 17-22 | மத். 13: 36-43 |